மாலைமதி

03-03-2003 ரூ 5.00 ஐந்து ரூபாய்



# தீக்குள் விரலை வைத்தாள்!

பெ. நாயகி

# தீக்குள் விரலை வைத்தாள்!

ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தீவிரம் சிந்துவின் கண்களில் விரிந்திருந்தது. அது மற்றவர்களுக்குத் தெரியாவண்ணம் கண்ணீர் திரையிட்டிருந்தது.

தான் புகுந்த வீட்டினை ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டாள். இதுதான் கடைசிப் பார்வை என்று மனதினுள் சொல்லிக்கொண்டாள்.

வாசல் வரைகூட வழியனுப்ப வரவில்லை மாமியார் ராஜேஸ்வரி.

அவளை எதிர்த்துப் பேசவோ ஏதும் செய்யவோ இயலாத அந்த வீட்டு ஆண்மகன்கள் ஐவரும் அங்கே இருந்தனர். மூத்தவர் ராஜேஸ்வரியின் கணவர். சிந்துவின் மாமனார் சம்பத். சிந்துவின் பெட்டியைக் கையில் ஏந்தியபடி அருகில் இருந்தவன் அவள் கணவன் பூமிநாதன். துக்கத்தை அடக்கி, புன்னகைக்க முயன்றபடி கையசைத்து வழியனுப்ப பூமிநாதனின் தம்பிகள் மூவர்.

போகலாமா என்பதுபோல் ஆட்டோக்காரன் ஹாரன் அடித்து அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான்.

பொதுவாக அவர்களைக் கும்பிட்டாள் சிந்து.


"பத்திரமாப் போயிட்டு வாம்மா" என்றார் மாமனார்.

பூமிநாதன் ஏதும் சொல்லாமல் பெட்டியை ஆட்டோவில் ஏற்றிவிட்டுத் தானும் ஏறி உட்கார்ந்துகொள்ள, சிந்து அவனருகில் அமர்ந்து கொண்டாள்.

ஆட்டோ கிளம்பி விரைந்தது.

சிந்துவின் அப்பாவுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை.

"வாங்க மாப்பிள்ளை! வாங்க!



என்னம்மா சிந்து, எப்படிம்மா இருக்க?" என்று பதறியவராக ஆட்டோவில் இருந்து அவர்கள் இறங்க உதவினார்.

ஆட்டோவை அனுப்பிவிட்டுப் படியேறி உள்ளே போய் ஹாலின் சோஃபாவில் தொப்பென்று அமர்ந்தான் பூமிநாதன்.

"என்ன மாப்பிள்ளை, வீட்டில் எல்லோரும் சௌக்கியம்தானே?" என்று சம்பிரதாயமாக விசாரித்தார்.

"எல்லாரும் நல்லா இருக்காங்க. நீங்க போன தடவை பார்த்ததற்கு மெலிஞ்சு போனமாதிரி இருக்கீங்க? நேர நேரத்துக்கு ஒழுங்கா சாப்பிடறீங்களா இல்லையா?"

மருமகன்கள் இந்த அளவு விசாரித்துவிட்டால்தான் தமிழ்நாட்டு மத்திய தர மாமனார்களுக்கு ஜன்மம் சாபல்யம் அடைந்துவிடுமே! 'பெருமை பிடிபடாமல் சிரித்தாலும் மாணிக்கத்துக்கு கவனம் முழுதும் சிந்து மீதுதான் இருந்தது.



மகள் எழுந்து உள்ளறைக்குப் போக, பின்னேயே எழுந்து போனார்.

"என்னம்மா, ஏதும் பேச மாட்டேங்கற? நல்லாத்தானே இருக்கற?"

திரும்பி அவரைப் பார்த்தவளுக்கு மனம் கனத்தது. அழுதுவிடக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தாள். வலிய வரவழைத்துக்கொண்ட புன்னகையோடு, "அப்பா! அவர் அடுத்த வாரம் பத்து நாளுக்கு வடக்கே அலுவலக விஷயமாப் போறார். அதான் உங்ககூட வந்து இருந்துட்டுப் போகலாம்னு வந்திருக்கேன். போதுமா?" என்றாள்.

கூடவே எப்படித்தான் கூசாமல், தடுமாறாமல் தன்னால் பொய் சொல்ல முடிகிறதோ என்கிற வியப்பும் ஏற்பட்டது.

எவ்வளவுதான் உண்மை மட்டுமே பேசுபவளாக வளர்ந்தாலும், ஒரு பெண் தன் பெற்றோரிடம் புகுந்த வீட்டைப் பற்றியும், புருஷனைப் பற்றியும் கருத்துக் கூறுகையில் பொய் சொல்லித்தான் ஆகவேண்டி இருக்கிறது. சுதந்திரமாக, வேஷம் ஏதும் இல்லாமல், இயல்பாக, பட்டாம்பூச்சியாகப் பறந்து திரிந்து வளரும் பெண், பொய் சொல்லிப் பழகுவதும் போலியாக சந்தோஷம் காட்ட ஆரம்பிப்பதும் கல்யாணத்துக்குப் பிறகு தன் வீட்டாரைச் சந்திக்கும்போதுதான் தொடங்குகிறதோ!

இந்த விவரங்கள் புரியாத மாணிக்கத்தின் முகம் மலர்ந்தது.

அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து விசாரித்துவிட்டுப் போனார்கள்.

"உங்கப்பாவை நாங்க என்னதான் அப்பான்னு கூப்பிட்டுப் பிரியமா இருந்தாலும் அவருக்கு உன் கவலைதான் சிந்து. ராத்திரில்லாம் ஒழுங்காவே தூங்கறது இல்லை. வீட்டில் ரொம்பநேரம் லைட் எரிஞ்சிட்டே இருக்கும். சில நாட்கள்ல காலையில நாங்க எழுந்து வரும் வரைக்கும் எரிஞ்சிட்டிருக்கும்னா பார்த்துக்கோயேன். கொஞ்சம் சொல்லிட்டுப் போம்மா" என்றார்கள்.

"அதெல்லாம் இல்லைம்மா. எப்போதாவது உன் நினைவு வந்தா அன்னிக்கு மட்டும் தூக்கம் வர தாமதமாகும். இவங்களெல்லாம் அன்பு மிகுதியில் மிகைப்படச் சொல்றாங்கம்மா."

அன்பு!

சிந்துவின் இதழ்களில் புன்னகை ஓடியது. எப்படி இருந்து வளர்ந்தவள்! அம்மா இல்லாத குறையே தெரியாத அளவுக்கு ஒரு சுடுசொல்கூடக் கேட்காமல் வளர்ந்தவள் அல்லவா. இந்த வளாகத்துப் பெண்களும் நல்லவர்களாகவே அமைந்தது அவள் செய்த யோகமா, அதுவே அவளுக்குப் பாதகமாக அமைந்து விட்ட பாவமா?

வீட்டினை ஒழுங்கு செய்தாள். அப்பா நான்கைந்து நாட்களாகத் துவைக்காமல் சேர்த்து வைத்திருந்த அழுக்குகளைத் துவைக்கும் எந்திரத்தில் போட்டுத் துவைத்தாள். அடுக்களையைச் சுத்தம்செய்து சமைத்தாள். எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள்.

அப்பாவின் முகத்தில் சந்தோஷம் பொங்கி இருப்பதைக் கண்டு மகிழ்ந்தாள்.


"நீங்க வேணா ஒரு தூக்கம் போடுங்களேன் மாப்பிள்ளை. களைப்பா இருப்பீங்க" என்று மாணிக்கம் மாடி அறையை ஒழித்து கட்டிலைச் சரிசெய்து தர, பூமிநாதன் கண்கள் செருக 'அப்பாடா' என்று நீட்டி நிமிர்ந்தான்.

"நீயும் போய்ப் படுத்து ஓய்வெடும்மா. சாயங்காலம் கோவிலுக்குப் போகலாம்" என்ற மாணிக்கம், தானும் ஹாலில் பாயை விரித்துப் படுத்தார். மனம் லேசாகிப் போன நிம்மதியாலோ என்னவோ அடுத்த கணமே அவரிடமிருந்து மெல்லிய குறட்டை எழத் தொடங்கியது.

சிந்து யோசனையில் ஆழ்ந்திருந்தபடி மீதி வேலைகளை முடித்தாள்.

கீழே வந்தாள். அடுக்களைக்குள் சென்று கதவைச் சார்த்தி உள்பக்கமாகத் தாளிட்டுக் கொண்டாள். மண்ணெண்ணெய் டின்னை எடுத்தாள். மூடி திறந்து தன் மீது கொட்டிக் கொண்டாள். அடுப்பு மேடையில் இருந்து தீப்பெட்டியை எடுத்து குச்சி எடுத்து உரசிப் பற்ற வைத்தாள்.

ஜன்னல் வழியே கேட்ட "சிந்தூ..." என்கிற பூமிநாதனின் அலறல் அவளை ஒன்றும் செய்யவில்லை.



## 2

"அம்மா! நாம மோசம் போயிட்டோம்மா. சிந்து மண்ணெண்ணெய் ஊற்றி தீப்பத்த வச்சுக்கிட்டாம்மா" என்று தொலைபேசியில் பூமிநாதன் அலற ஒருகணம் ஆடிப்போனாள் ராஜேஸ்வரி.

"என்... என்னடா சொல்ற?" என்றாள் பதற்றமாக. "இந்தச் சனியன் இப்படி ஏன் செஞ்சு தொலைச்சா?" என்றாள் அடுத்தகணமே.

"என்ன விஷயம்? ஏன் ஃபோன்லயும் கத்தற?" என்றபடியே அவளிடமிருந்து ரிஸீவரை வாங்கிய சம்பத், "ஹலோ, யாரு? என்ன விஷயம்?" என்று கேட்டார்.

பூமிநாதன் அவரிடம் விஷயத்தைக் கூற சிலையாகிவிட்டார் சில கணங்களுக்கு.

"இப்போ எப்படி இருக்கா? எங்கே இருக்கீங்க?" என்று கேட்டார்.

"எல்லோரும் கிளம்பி வாங்கப்பா. இப்போ பழங்காநத்தம் கார்னர்ல இருக்கே எஸ்.கே.ஆஸ்பிட்டல் அங்கேதான் அட்மிட் பண்ணியிருக்கோம்."

"நிலைமை எப்படி இருக்கு?"

"ரொம்ப க்ரிட்டிக்கல்னுதான் டாக்டர் சொல்றார். உண்மையைச் சொல்லணும்னா எனக்கு ரொம்ப பயம்மாத் தாம்ப்பா இருக்கு."

"..சரி, சரி, நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். நாங்க கிளம்பி வர்றோம்.

நாலஞ்சு மணி நேரத்துக்குள்ள வந்திருவோம். அதுவரைக்கும் தைரியமா இரு. சம்பந்தி ரொம்ப ஒடஞ்சு போய் இருப்பாரு. நீதான் தைரியம் சொல்லணும். நாங்க வர்றோம்" என்றவராக தொலைபேசியைக் கீழே வைத்தார்.

திடீரென்று ஞாபகம் வந்தவள் போல் கேட்டாள் ராஜேஸ்வரி. "என்னங்க, இது போலீஸ் கேஸ் ஆயிடாதில்ல?"

சம்பத் திடுக்கிட்டார். "நீ சொன்ன உடனே தான் எனக்குமே தோணுது"

"ஐயோ! என்னவாகும்?"

"தெரியலை. இதுவரைக்கும் விஷயம் போலீஸுக்குப் போகலைன்னுதான் நினைக்கிறேன். இல்லைன்னா உன் மகன் ஆஸ்பத்திரில இருந்தா பேசுவான்? போலீஸ் ஸ்டேஷன்ல இருந்தில்ல பேசியிருப்பான்?"

"அப்போ நாமளும் எதுக்கும் ஒரு வக்கீலைக் கலந்துக்குவோமா?"

"முட்டாள்தனமாப் பேசாதே. நீயே எங்கப்பன் குதிருக்குள் இல்லைன்னு காட்டிக் குடுப்ப போலிருக்கே. முதல்ல நாம் எல்லாரும் மதுரைக்குப் போவோம். அங்கே போய் நிலைமைக்குத் தகுந்த மாதிரி முடிவு பண்ணிக்கலாம்."

ராஜேஸ்வரி ஒருகணம் யோசித்தாள். மறுகணம் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

"நான் வரலைங்க, எனக்குத் தலைவலி கொல்லுது. நீங்க போயிட்டு வாங்க."

"அங்கே எல்லாரும் கேப்பாங்களே!"

"எதையாவது சொல்லிச் சமாளிங்க" என்று எரிந்து விழுந்தாள்.

"இந்தச் சனியன் இப்படி ஏன் பண்ணித் தொலைச்சது எல்லாருக்கும் பிரச்சினை வரும்படியா" என்று ஒருகணம் எரிச்சல் பட்டாலும் மறுகணம், "நல்லவேளையா அங்கே அவள் அப்பன் வீட்டில் போய்ச் செய்து தொலைஞ்சா, இதே காரியத்தை இங்கே பண்ணித் தொலைச்சிருந்தாள்னா, நான்தான் கொளுத்தினேன்னு ஊரெல்லாம் பேராயிருக்குமே'' என்றும் ஆறுதல் பட்டுக்கொண்டாள்.

சம்பத் அவசரமாகக் கிளம்பினார்.

"ரகு மட்டும் லைன்ல கிடைச்சான். சொல்லிட்டேன். ஜவஹரையும் கூட்டிட்டு அங்கே நேரா வந்திடறதாச் சொல்லியிருக்கான். நீ பாலனை உன் கூடவே வச்சுக்கோ. அங்கே உள்ள நிலைமையை உனக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிட்டே இருக்கேன்."

## 3

இனியும் தன் புகுந்த வீட்டில் இருக்கவே முடியாது என்கிற நிலை ஏற்பட்டுவிட்டதை உணர்ந்தும், வெகுகாலம் பொறுமையாகத்தான் இருந்தாள்

சிந்து.

கணவன் பூமிநாதன் என்னதான் நல்லவன் என்றாலும் தாயின் முன் வாய் பேசாதவன் என்றால், அவனை எந்த ரகத்தில் சேர்ப்பது? அதற்காக அவன் தன் பெண்டாட்டிக்குப் பரிந்துகொண்டு தாயுடன் சண்டை போட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பெல்லாம் இல்லை சிந்துவுக்கு. குறைந்தபட்சம் அம்மாவுடைய வாயை அடக்க முயலலாம் அல்லவா?

ராஜேஸ்வரிக்கு வாயைப் படைத்த ஆண்டவன், அதில் நாக்குக்குப் பதிலாக ராஜநாகத்தைத்தான் வைத்துவிட்டான் போலும்.

பேச்சா பேசுகிறாள்? வாயைத் திறந்தால் தீ கொட்டுவது, ஒரு வகைப் பெண்களின் வழக்கமாக இருக்கும். அவர்கள்கூட ஒரு வகையில் பரவாயில்லை எனலாம். கேட்போர் தம் காதுகளையும் மனதையும் தண்ணீர் வெள்ளமாக வைத்துக்கொண்டால் அந்தத் தீயினால் காயம் உண்டாகி விடாதவாறு தம்மைக் காத்துக்கொள்ள இயலும். ஆனால் ராஜேஸ்வரியின் நாக்கு தீயை மட்டும் கொட்டுவது அல்ல. விஷத்தையும் சேர்த்துக் கக்கும். அதில் இருந்து யார் தம்மைக் காத்துக்கொள்ள முடியும்? அது அந்தப் பரமனுக்கே தொண்டையைப் பாதித்த விஷயமாயிற்றே!

இவளுடைய பேச்சு சகிக்காமல்தான் இவளுடைய உறவில் எவரும் இவளிடம் அண்டுவதில்லை என்று சுற்று வட்டார சொந்த பந்தங்களும் பழகியவர்களும் தமக்குள் பேசிக் கொள்வது வழக்கம். ராஜேஸ்வரிக்கு உடன் பிறந்தவர்கள் என்று யாரும் கிடையாது. அவளுடைய பெற்றோர் காசி ராமேஸ்வரம் போய்த் தவம் கிடந்து பெற்ற பிள்ளை அவள். அவள் வளர்ந்த விதத்திலும் பேசும் முறைகளிலும் சந்தோஷம் இல்லாமல் நொந்து போய்த்தான் அவர்கள் இறந்தார்கள் என்று சொல்பவர்களும் உண்டு.

இப்போது அடுத்தது நான்தான் பலியாகப் போகிறேனோ?

சிந்துவுக்கு அழுகை அழுகையாக வரும்.

அவளை மாமியார் உதவாக்கரை என்றோ, எதற்கும் லாயக்கற்றவள் என்றோ திட்டிவிட்டால் கூடப் பொறுத்துக் கொள்ளுவாள்.

தமிழில் ஒட்டுமொத்தமாகத் தடை செய்யப்பட்டு அதனை உச்சரிப் போருக்கு நாக்கினைத் துண்டிக்கும் படி சட்டம் இயற்றப்பட வேண்டிய வார்த்தை ஒன்று உண்டு. அதனை ஆண்கள் கிட்டத்தட்ட உபயோகிப்பதே கிடையாது. பெண்களால் பெண்களுக்கு எதிராக பிரயோகிப்பதற்காகவே உபயோகப்படுத்தப்படும் பெண்களுடைய மூன்றெழுத்து வார்த்தை அது.

மலடி!

ஒரு நாளைக்கு பத்து முறை அந்த வார்த்தையினைக் கேட்க நேர்ந்தால் மனம் என்ன பாடு படும்?

சிந்து மென்மையாகப் பிறந்தவள். மென்மையான மனம் படைத்த அம்மா, அதிர்ந்து பேசாத அப்பா ஆகியோரிடம் ஒற்றைப் பிள்ளையாக வளர்ந்தவள்.

"மனித உடலின் சகல புலன்களும் இயற்கையில் இருந்து நல்லவற்றை மட்டும் எடுத்துக் கொள்கின்றன. கண்களுக்கு நல்ல காட்சிகள் கிடைக்கின்றன. காதுகள் இனிய இசையைக் கேட்கின்றன. வாய் நல்ல உணவை உட்கொள்ளுகிறது. தோல் அருமையான தென்றலை அனுபவித்துச் சுகிக்கிறது. மூக்கு ஆக்ஸிஜனை எடுத்துக் கொள்கிறது. ஆனால் அதே ஐந்து புலன்களில் இருந்து மனிதனால் எதை வெளியேற்ற முடிகிறது? கண்கள் பீளையையும், மூக்கு கரியமில வாயுவையும் சளியையும், காது அழுக்கினையும், தோல் நாற்றமெடுக்கும் வியர்வையையும், வாய் எச்சிலையும் என்று வெளி உலகிற்கு மனிதன் தரும் எல்லாமே நாற்றமெடுத்த விஷயங்கள்தான். இது அவன் வேண்டுமென்று செய்வது அல்ல. இயற்கையின் அமைப்பே அப்படித்தான். இந்தக் கழிவு வெளியேற்றம் என்பது மனிதனுடைய கட்டுப்பாட்டுக்கு மீறியது. அவனால் நல்லவிதமான ஒன்றை இந்த உலகிற்குத் தர இயலும் என்றால்; முழுக்க முழுக்க அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ஒரு விஷயம் உண்டு என்றால் அது நாக்கின் மூலம் வெளிப்படுத்தும் சொற்கள் மட்டும்தான். நல்ல சொற்களை மட்டுமே பேசுவது என்பதை அவன் தன் மன உறுதியாகக் கொண்டான் என்றால் இந்த உலகில் சண்டை இருக்காது; சச்சரவு இருக்காது. எங்கும் அமைதியும் சமாதானமும் மட்டுமே நிலவி இந்த உலகம் வாழ்வதற்குரிய மிகச் சிறந்த இடமாக ஆகிவிடாதா?" என்று சிந்து சிறு பிள்ளையாக இருந்தபோது ஒரு சாமியார் தாத்தா சொன்னார்.

அது அவளுக்குள் ஆழப் பதிந்து போனது.

அவளுக்குக் கல்யாணம் பேசும்போது அவளுடைய பெற்றோர்கள் மட்டுமின்றி நெருங்கிய உறவினர்கள்கூட பணக்கார சம்பந்தம் அமைகிறதோ இல்லையோ, பண்பான சம்பந்தம் அமைய வேண்டுமே என்று அவள் சார்பில் கவலைப்பட்டது நிஜம்.

ராஜேஸ்வரிக்கு மகள் கிடையாது. நான்கு பிள்ளைகள். நான்குமே மகன்கள்தான் என்று அறிய வந்தபோது சிந்துவின் வட்டாரத்தில் உள்ளூர சந்தோஷம் இருந்தது. அதுவும் அந்த வீட்டுக்கு மூத்த மருமகளாக நுழையப் போகிறாள் சிந்து என்கிறபோது நிச்சயமாக அவளுக்குப் பிரச்சினை வர வாய்ப்பு இல்லை என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்.

பெண் பார்க்க வந்திருந்தபோதுகூட ராஜேஸ்வரி சபையில் எல்லோர் முன்னிலையிலும் அப்படித்தான் சொன்னாள். "எனக்கு பெண் பிள்ளை என்றால் மிகவும் பிடிக்கும். அதற்காகத்தான் நான்கு முறை கரு சுமந்தேன். நான்குமே பையன்களாகப் போய்விட்டார்கள். சிந்து பார்ப்பதற்கும் பழகுவதற்கும் ரொம்ப பாந்தமாகத் தெரிகிறாள். எனக்கு மகள் இல்லாத குறையைப் போக்குவாள்னு நினைக்கிறேன்" என்று அவள் சொன்னபோது சிந்து அதிர்ஷ்டக்காரி என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்.

அவள் புருஷன் சம்பத் எதுவும் பேசாமல் இருந்தார். அந்த வீடு 'மதுரை ராஜ்யம்' என்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

மாலைமதி 03.03.2003

ஒரே பெண் என்பதால் சிந்துவின் திருமணம் ஏக தடபுடலாக நடந்தது.

மாப்பிள்ளை பூமிநாதன் பெண்ணின் அழகுக்கு ஏற்ற ஆண்மைக் கம்பீரத்துடன் இருந்தான். சிந்துவின் வீட்டாரிடம் நல்ல மரியாதையுடன் நடந்து கொண்டான். அவன் மட்டுமின்றி அவனுடைய தம்பிகளான ரகு, ஜவஹர், பாலன் ஆகிய மூவருமேகூட அனைவருடனும் பண்புடன் பழகினர். சிந்துவிடம் 'அண்ணி அண்ணி' என்று மரியாதையுடன் நடந்து கொண்டனர்.

மாமனார் சம்பத் அவளை 'அம்மா' என்றுதான் அழைத்தார்.

திருமணம் முடிந்து அது தொடர்பான சடங்கு சம்பிரதாயங்கள் முடிந்து, சிந்து பிறந்த வீட்டை விட்டு நிரந்தரமாக ஒதுங்கி, அந்த வீட்டுப் பெண்ணாக ஆவதற்கான இடைவெளியில், எல்லோருக்கும் நிம்மதியும் திருப்தியும் மட்டுமே இருந்தது.

புதிய இடத்தின் வாழ்க்கையில் சிந்து சந்தோஷமாக இருந்தாள்.

எல்லாம் ஒன்றரை வருடங்கள் மட்டுமே நீடித்தது.

மாதம் தவறாமல் சிந்து 'முழுகி'க் கொண்டிருந்தது ராஜேஸ்வரியை உறுத்தத் தொடங்கியது.

"ஏன்? புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேரும் இப்போதைக்கு பிள்ளைகள் வேண்டாம்னு எதுவும் முடிவு செஞ்சிருக்கீங்களா?" என்று கேட்டாள் லேசான எரிச்சலுடனேயே.

"ஆமாம்" என்று பூமிநாதனும், "இல்லை அத்தை" என்று சிந்துவும் ஒரே சமயத்தில் சொல்ல ராஜேஸ்வரிக்குள் அதுவரை நித்திரையில் இருந்த ஆதிசேஷன் மெல்ல அசைந்து கொடுத்து சோம்பல் முறித்தான்.

"உங்க ரெண்டு பேர் பேச்சுமே சரியில்லையே! ஏதோ பிரச்சினைன்னு தெரியுது. ஏண்டா பொண்டாட்டியை விட்டுக் கொடுக்கக்கூடாதுன்னு பொய் பேசறியா? உண்மையைச் சொல்லு. உங்களுக்குள்ள என்ன நடக்குது?" என்று வீட்டின் நடுஹாலில் வைத்து உரத்த குரலில் ஆரம்பித்தாள்.

கொழுந்தன்கள் மூவர் இருக்கும்போது தன் மாமியார் இப்படி வெளிப்படையாகக் கேட்டது சிந்துவைக் கூச வைத்தது. அவஸ்தையாக நெளிந்தபடி கணவனைப் பார்த்தாள்.

"அவனை என்ன பார்க்கற திருட்டுக் கழுதை."

சிந்துவின் கண்கள் குபுக்கென்று நிறைந்தன. எந்த நிமிடமும் உடைப்பெடுக்கும் பலவீனத்துடன் இருந்தன இமை அணைகள்.

"நான் மற்ற வீட்டு மாமியார்களைப் போல பேரன்தான் வேண்டும் அப்படீன்னெல்லாம் கண்டிஷன் போடலை. இந்தக் குடும்பத்தின் அடுத்த தலைமுறை வாரிசு சீக்கிரமா இங்கே நடமாடணும். அவ்வளவுதான் சொல்லிட்டேன்."

அன்றுதான் ஆரம்பம்.

அதன் பிறகு ராஜேஸ்வரி சிந்துவைப் பார்க்கிற போதெல்லாம் நேரடியாகவே கேட்க ஆரம்பித்தாள்.

"ஏண்டி நாயே! எவ்வளவு திங்கற! மசக்கை வாந்திதான் வேண்டாம். அட்லீஸ்ட் என்னை ஏமாத்தற மாதிரி ஒரு பித்த வாந்தி கூட எடுக்க மாட்டியாடி? எப்படித்தான் அவ்வளவும் செமிக்குதோ" என்று ஒருமுறை சாப்பாட்டு மேஜையில் வைத்து எல்லோர் முன்னிலையிலும் கேட்க, சிந்துவுக்கு பூமி அப்படியே பிளந்து தன்னை உள்ளிழுத்துக் கொள்ளக்கூடாதா என்றிருந்தது.

புருஷன், மாமனார், கொழுந்தன்கள் உள்பட எல்லோரும் அமைதியாக இருந்தது வேறு உறுத்தியது.

அப்படியே சாப்பாட்டினைப் பாதியில் வைத்துவிட்டு எழுந்து ஓடிப் போகலாமா என்று தோன்றியது. அப்படிச் செய்யவும் பயமாக இருந்தது.

கஷ்டப்பட்டு விழுங்க முயற்சித்தாள். முடியாமல் அடி வயிற்றில் இருந்து ஓங்கரித்துக் கொண்டு வந்தது. அப்படியே எழுந்து ஓடினாள் கையலம்பும் இடத்துக்கு.

வயிற்றிலிருந்த அவ்வளவும் கொடகொடவென்று வெளியே வந்தபிறகுதான் நிம்மதியானது மனம்.

உடம்பு குலுங்க வாந்தி எடுக்கும்போது தனக்குத் துணையாகக்கூட யாரும் எழுந்து வரவில்லை என்பதே அதிர்ச்சியாக இருந்தது சிந்துவுக்கு.

"நல்ல மருமகளைப் பிடிச்சிட்டு வந்தீங்க அதிசயமா. பயங்கர மாய்மாலக்காரியா இருப்பா போலிருக்கே. சொடுக்கு போட்ட மாத்திரத்தில் வாந்தி எடுத்துக் காட்டறா. சொல்ல முடியாது. இவளெல்லாம் கர்ப்பம்னு கூட நாடகம் ஆடி ஒரு அநாதைக் கழுதையைத் தூக்கிட்டு வந்து இதுதான் உங்க குடும்பத்து வாரிசுன்னு சொன்னாக்கூட சொல்லுவா. பொண்ணு பார்க்கப் போயிருந்தப்போ இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கற மாதிரி அவ்வளவு பவ்வியமாக வேஷம் காண்பிச்சா. ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்ங்கற கதையா இந்த வீட்டைக் கெடுக்க வந்த பெருச்சாளியா ஆகிப் போனாளே..." என்று பலமாக அங்கலாய்க்கத் தொடங்கிவிட்டாள் ராஜேஸ்வரி.

அன்று இரவுதான் கணவனிடம் முதல் முறையாக மாமியார் குறித்த தன் பயத்தை வெளிப்படுத்தினாள் சிந்து.

# 4

"என்ன பண்றது? அம்மா அப்படித்தான். இந்த வீட்டுக்கு எங்க சொந்தக்காரங்கன்னு யாராவது வர்றாங்களான்னு பார்த்தியா. ஒருத்தரும்

வரமாட்டாங்க. எங்கம்மாவுடைய பேச்சுக்கு பயந்துதான். அவளுக்கு எதிரா இன்னொருத்தருக்கு சாதகமா யாராவது எதுவும் சொல்லிட்டா அவள் எடுக்கிற விசுவரூபத்தை யாராலும் எதிர்கொள்ள முடியாது. அப்பாவே ஆடிப் போயிருக்கார் சில சந்தர்ப்பங்களில். உன்னைப் பற்றி அம்மா இந்த மாதிரிப் பேசுவதை எங்களால் சகிக்க முடியலைதான்."

"அவங்க குடும்பத் தலைவி. பெரியவங்க. என்னை எது வேணும்னாலும் சொல்ல உரிமைப்பட்டவங்க. நான் ஒத்துக்கறேன். அட்லீஸ்ட் தனியா இருக்கும்போது பேசட்டுமே. உங்க தம்பிகள் முன்னிலையில் பேசறதுதான் என்னால் தாங்க முடியலை."

"உன் அவஸ்தை புரியுது சிந்து. என் தம்பிகள் மட்டும் அந்த மாதிரிக் காட்சிகளை ரசிக்கறாங்கன்னா நினைக்கற? அவங்களுக்கும் சங்கடங்கள் இல்லாமல் இல்லை. உனக்குத் தெரியாது, ஒருமுறை தம்பி ரகு அம்மாவிடம் தனியா உன்னை அவள் புண்படப் பேசறது பற்றிக் கண்டித்துச் சொல்ல முயற்சி பண்ணினான். அதற்காக அவன், அவளிடம் வாங்கிக் கட்டிய வார்த்தைகளை இப்போ நான் உன்னிடம் சொன்னால் நீ உங்க வீட்டுக்கே ஓடிப் போயிடுவ."

வாயடைத்துப்போனாள் சிந்து.

சிறிதுநேரம் கழித்து மெதுவாகத் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

"என்னங்க! உங்கம்மா என்னைச் சொல்வதெல்லாம் இருக்கட்டும், உங்க மனசில் அதே மாதிரியான எண்ணங்கள் ஏதும் இல்லையே..."

அவளுடைய அப்பாவியான முகத்தை உற்றுப் பார்த்த பூமிநாதன், அப்படியே அவளை அணைத்துக் கொண்டான். "சிந்து! நான் கடவுளிடம் வேண்டாத நாளில்லை. எனக்காகவோ சிந்துவுக்காகவோ கூட வேண்டாம். எங்கம்மாவின் வாயை அடைப்பதற்காகவாவது சிந்துவின் வயிற்றில் ஒரு ஜீவனை ஜனிக்கவிடுன்னு தினமும் வேண்டிட்டிருக்கேன். ஒரு நாளில்லை ஒருநாள் பகவான் நம் சொல்லைக் கேட்காமலா போவான்?" என்றபோது, அவன் குரல் தழதழத்தது.

"நாம மெடிக்கல் செக்கப் செஞ்சு பார்த்துக்கலாமா?"

"வேண்டாம் சிந்து. அட்லீஸ்ட் இப்போ வேண்டாம். குறை என்னிடம் இருந்திட்டாப் பரவாயில்லை. ஒருவேளை உன்னிடம் இருந்து தொலைச்சா எங்கம்மா ராட்சசி, உன்னை வார்த்தைகளாலேயே விழுங்கிடுவா."

"அதுக்கில்லைங்க. ஏதாவது சின்ன அளவிலான குறைபாடுதான்னு தெரியவந்தா சரிசெஞ்சுக்கலாமேன்னு பார்த்தேன். எந்த சந்தர்ப்பத்திலயும் உங்களுக்கு என் மேல குறையான எண்ணம் வந்திடக்கூடாதுங்க."

அவள் தலையில் தட்டினான் பூமிநாதன். "மண்டு! கல்யாணம்னு ஆனதுக்கப்புறம் உன்னுடைய குறை, என்னுடைய குறை - உன்னுடைய தவறு, என்னுடைய தவறுன்னு பிரிச்சு எதுவுமே கிடையாது. எல்லாமே

நம்முடையதுங்கற எண்ணம் வரணும். அந்தப் பக்குவம் வரலைன்னா அவன் ஆம்பளையே இல்லை. எங்கப்பாவைப் பாரு. இப்பேர்ப்பட்ட ராட்சஸிப் பொண்டாட்டியையே எங்கேயும் விட்டுக் கொடுத்தது கிடையாது. நான் உன்னை விட்டுக் கொடுப்பேனா? அப்படி ஏதாவது எண்ணம் எனக்குள் வந்தால் என் தம்பிகள்தான் விட்டுடுவானுங்களா? அவனுங்க மூவரும் முத்துக்கள். ரத்தினங்கள். உன் மேல எவ்வளவு மதிப்பும், மரியாதையும் வச்சிருக்கானுங்க தெரியுமா?"

தன் தம்பிகளைப் பற்றி அவன் சொன்னவை எதுவும் மிகை இல்லை என்று நிரூபிப்பது போல் ஒரு சந்தர்ப்பம் வந்தது.

தனக்குப் பழக்கமான ஒரு பெண்ணுடைய வீட்டுத் திருமணத்துக்காக ராஜேஸ்வரி இரண்டு நாட்கள் வெளியூர் போனாள் தன் கணவருடன்.

அண்ணன் தம்பிகள் நால்வரும் சிந்துவும் மட்டும்தான் வீட்டில் இருந்தார்கள். முதல் கொஞ்சநேரம் வழக்கமான பாணியில் பேசவே தயங்கியபடி இருந்த பூமிநாதனின் தம்பிகள், அதன்பிறகு இறுக்கம் தளர்ந்து கலகலவென்று பேச ஆரம்பித்தனர்.

சிந்துவின் பொறுமையை, பணிவான குணத்தை, அருமையான சமையல் பக்குவத்தை, வீட்டினை சுத்தமாகப் பேணும் கைத்திறனை, அழகை மனமாரப் புகழத் தொடங்கினர்.

"எங்களுக்கு கூடப்பிறந்த அக்கா தங்கைன்னு யாரும் இல்லையேங்கற ஏக்கம் ரொம்பவும் உண்டு."

"அக்கா தங்கைன்னு இருந்தா என்ன ஸ்பெஷல்?" என்று கேட்டாள் சிந்து.

"இல்லண்ணி. சகோதரின்னு ஒருத்தி இருக்கறது ஒரு தனி சுகம்தான். வீட்டில் ஒரு பெண் எங்கள் எல்லோருடனும் உரிமையாகச் சண்டை போட்டு, அதட்டி கண்டித்து, தொந்தரவு செய்து எங்களிடம் ஏதாவது வேண்டும் என்று கேட்டு பிடிவாதம் செய்து, எங்களிடம் சண்டை போட்டு திட்டு வாங்கி, அழுது அடம் செய்து எங்களால் தாஜா செய்யப்பட்டு சமாதானம் ஆகி - இப்படி எல்லாம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்."

"இவ்வளவு ஏக்கம் இருந்தா சொந்தத்துல யாராவது சகோதரி முறைக்கு இருந்தால் அவங்ககூடப் பழக வேண்டியதுதானே?"

"சரியாப் போச்சு. எங்கம்மாவைப் பத்தித் தெரியாத மாதிரி பேசறீங்க. எங்கள் உறவுக் கூட்டத்தில் தங்கை முறை ஆகின்ற பெண் பிள்ளைகளுடன் நாங்கள் பேசினால்கூட அம்மாவுக்குப் பிடிக்காது. அசிங்கமா ஏதாவது சொல்லித் தொலைப்பாள். அவளுடைய வாய்க்குப் பயந்தே நாங்க யாரிடமும் பேச்சு வச்சுக்கிறது இல்லை."

"அண்ணாவிடம் கல்யாணத்துக்கு முன்பே சொல்லி இருந்தோம். அண்ணி வந்தால் அவங்க எங்களுக்கு சகோதரி மாதிரிதான். நீ வேண்டுமானால் மச்சானாக

உறவு மாறிக்கோ. தயவுசெஞ்சு நாங்க அண்ணியா வரப்போறவங்ககிட்ட ஜாலியா சிரிச்சு, உரிமையோட கிண்டல் பண்ணிப் பேசறதுக்கு மட்டும் அனுமதி கொடுன்னு கேட்டிருந்தோம்."

"ஆனா அப்போ அம்மாவை எப்படி மறந்தோம்னுதான் நினைவு இல்லை" என்று பாலன் சொல்ல, எல்லோரும் மனம் விட்டுச் சிரித்தார்கள்.

வேலைக்குப் போக வேண்டிய பூமிநாதனும், ரகுவும் லீவு போட, கல்லூரிக்குப் போகவேண்டிய ஜவஹரும், பள்ளிக்குப் போகவேண்டிய பாலனும் மட்டம் போட்டனர்.

காய் நறுக்கித் தர ஒரு கொழுந்தன், பாத்திரங்கள் கழுவித் தர ஒரு கொழுந்தன், பேச்சுத் துணைக்கு ஒரு கொழுந்தன் என்று மூவராலும் சூழப்பட்டிருந்த சிந்துவுக்கு சந்தோஷம் உச்சத்தில் இருந்தது.

நல்ல சாப்பாடு, அரட்டை, டி.வி.யில் கமெண்ட்டுகளுடன் படம், கொறிப்பதற்கு விதவிதமான டிஃபன் என்று மொத்த சந்தோஷத்தையும் குத்தகைக்கு எடுத்திருந்த அந்த நாள், முடியாமல் நீடித்திருக்கக்கூடாதா என்கிற ஏக்கம் எல்லோருக்குமே இருந்தது.

"அண்ணி! அம்மா முன்னிலையில் நாங்க உங்களிடம் ஃப்ரீயா பேச முடியாது. எங்கள் முன்னிலையில் அம்மா இங்கிதம் தெரியாமல் உங்களைக் கேவலப்படுத்திப் பேசினால் நாங்க ஏதும் நினைப்போமோன்னு தயவுசெஞ்சு நினைக்காதீங்க" என்றான் ஜவஹர்.

"ஆமாம் அண்ணி! ஜவஹர் சொல்றது எங்க எல்லோர் சார்பிலும்தான். சத்தியமாக சொல்றோம். அந்த மாதிரியான சமயங்களில் நாங்க எங்களுக்குள்ள என்ன நினைப்போம் தெரியுமா? கடவுள் கண்களை மூட இமைகள் படைத்தது போல், காதுகளை மூடிக் கொள்ளவும் ஏதாவது வசதி செய்திருந்தால் எவ்வளவு நல்லா இருந்திருக்கும்னுதான்."

"இந்த சமயத்தில் என் காதுகள் செவிடாகி இருக்கக்கூடாதான்னுகூட நான் நினைத்த சந்தர்ப்பங்கள் உண்டு" என்று பாலன் சொல்லவும், அழுகையே வந்துவிட்டது சிந்துவுக்கு.

"இது போதும்ங்க. இந்த ஜன்மம் முழுசும் நான் எத்தனை இடிகளையும் தாங்கிட்டு இருந்திடமுடியும்" என்றாள் உற்சாகமாக.

அப்படித்தான் நம்பவும் செய்தாள்.

## 5

ஆனால் அடுத்தடுத்த மாதங்களில் ராஜேஸ்வரியின் வார்த்தைகள் இன்னும் தடித்துப் போக, சிந்துவின் பாடு ரொம்பவும் திண்டாட்டமாகிப்

போனது.

"இந்த மூதேவி இப்படியே ஜனிக்காம இருந்து தொலைச்சா நான் என் அடுத்த மகனுக்கு எப்படிப் பெண் தேட முடியும்? இந்தக் குடும்பத்துல பொண்ணு கொடுத்தா, நாம் மகள் வயித்துப் பேரன் பேத்தியைப் பார்க்க முடியாது போலிருக்கேன்னு பொண்ணு வீட்டைச் சேர்ந்தவன் பேசமாட்டானா?" என்று புலம்ப ஆரம்பித்தாள்.

"அம்மா! தயவு பண்ணி அப்படி எல்லாம் பேசாதே! நீ சொன்னியேன்னு நாங்க ரெண்டு பேரும் டாக்டர் கிட்டப் போய் செக்அப் பண்ணிக்கிட்டோம். அவளுக்கு ஒரு குறையும் இல்லை. என்னிடம்தான் ஒரு சின்ன பிராப்ளம். அதுக்கு மெடிசின் எடுத்திட்டிருக்கேன். ஒரு வருஷத்துக்குள் எல்லாம் சரியாயிடும். நீ அவசரப்பட்டு எங்களுக்குக் குழந்தை பிறப்பு தள்ளிப் போறதைப் பற்றி ஏதேதோ சொல்லும் போதெல்லாம் நான் எனக்குள் கூசிப் போகிறேன். தயவு பண்ணி உன் மருமகளை மட்டமாப் பேசறதா நினைச்சுக்கிட்டு என்னைப் புண்படுத்தாதே" என்றான் பூமிநாதன் பளிச்சென்று.

இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்த ராஜேஸ்வரி, ஒரு நிமிடத்துக்குள் கண்டுபிடித்துவிட்டாள் மகன் பொய் சொல்கிறான் என்பதை.

"ஏய் திருட்டுக் கழுதை! உண்மையைச் சொல்லு. உன் புருஷன் சொல்றதெல்லாம் நிஜமா?" என்றாள் உறுமிய குரலில்.

சிந்து நடுங்க ஆரம்பித்துவிட்டாள்.

"ஆ.. ஆமாம்... அத்தை" என்றாள் திக்கித் திணறும் குரலில்.

அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள் ராஜேஸ்வரி. "உன் புருஷன் மேல சத்தியமா சொல்லு" என்று பிரயோகித்தாள் பிரம்மாஸ்திரத்தை.

சிந்துவுக்குக் காலுக்கடியில் பூமி நழுவாத குறையாக தலை சுற்றத் தொடங்கியது.

"இல்லை.. இல்லை.. அவர் பொய் சொல்றார். நாங்கள் இன்னும் எந்த செக்கப்புக்கும் போகவில்லை" என்றாள்.

"அம்மா! நான் செக்கப் பண்ணிக்கிட்டது அவளுக்குத் தெரியாது" என்றான் பூமிநாதன் பளிச்சென்று.

"மறுபடியும் பொய்."

"இல்லைம்மா. உன் மேல் ஆணையா இதுதான் நிஜம். நான் முதலில் என்னைச் செக்கப் பண்ணிட்ட பிறகு அவளை டாக்டரிடம் அழைத்துப் போகலாம்னு இருந்தேன். எனக்கே குறைன்னு தெரிஞ்ச பிறகு அவளிடம்கூடச் சொல்ல எனக்குக் கூச்சமா இருந்தது. நீதான் இப்படி வெளிப்படையா சொல்லவச்சு என்னைக் கேவலப்படுத்திட்ட" என்றான்.

ராஜேஸ்வரிக்கு நம்பிக்கை வரவில்லை.

"அதை ஏன் என் மீது சத்தியம் பண்ணிச் சொல்ற? உன் பொண்டாட்டி

மேல சத்தியம் பண்ணேன்."

பூமிநாதன் தயங்கினான்.

இன்னொரு பிரளயம் உருவாவதற்கான அனைத்து சூழல்களும் ஏற்பட்டன.

"அடப்பாவி! என் பேரில் பொய்ச் சத்தியம் பண்ணி நான் கைகால் விளங்காமல் போய்ச் செத்தால் கூடப் பரவாயில்லை என்னும் அளவுக்குப் பொண்டாட்டி மோகம் பிடிச்சு அலைய ஆரம்பிச்சுட்டானே" என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் எல்லோரும் திகைத்து நிற்க, அவசரமாகத் தொலைபேசியின் அருகே சென்று எண்களைச் சுழற்றத் தொடங்கினாள்.

"யாருக்கு?" என்று மெல்லக் கேட்டார் சம்பத்.

"நம்ம ஜோஸியர் பூமணியை வரச் சொல்லுங்க. இப்போ எனக்கு இவள் பற்றி முழுசாத் தெரிஞ்சாகணும்."

தொலைபேசியை வாங்கி சம்பத்தே பேசினார்.

பூமணி ஊருக்குப் போயிருக்க, அவருடைய சிஷ்யன் ராகவனை வரவழைத்தார் சம்பத், ராஜேஸ்வரியின் ஆவேசத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல்.

அவன் வந்து பூமிநாதன் மற்றும் சிந்துவின் ஜாதகங்களைப் பார்த்துவிட்டு ஏதேதோ கட்டங்கள் போட்டான். காற்றில் கையசைத்துத் தனக்குள் பேசினான். முடிவாக, "இந்தப் பெண்ணோட ருதுவான ஜாதகமே சரியான்னு தெரியலை. ஒரிஜினல் ஜாதகத்துக்கும் அதற்கும் பொருத்தமே இல்லை" என்றான்.

திடுக்கிட்டார் சம்பத். "பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணு. குடும்பத்துக்கு ஏத்த பொண்ணு. குடும்ப ஒற்றுமையைக் குலைக்காமல் இருப்பா. ஆனா இவள் உங்க வீட்டுக்கு வந்து மூன்று வருடங்களுக்குள் ஒரு பெரிய குழப்பமான சூழல் உங்க வீட்டில் நிகழும். ஆனா அதுவும் ஒரு நல்லதுக்குத்தான் இருக்கும். பயப்பட ஒன்றுமில்லை" என்கிற அளவில்தான் பூமணி சொல்லியிருந்தார். அதுவும் ராஜேஸ்வரிக்குத் தெரியாது.

''சரியாப் பார்த்துச் சொல்லுப்பா. உங்க குரு பார்த்து ஓ.கே. சொன்னப்புறம்தான் நாங்க இந்தப் பொண்ணையே தேர்ந்தெடுத்தோம்" என்று பதறினார்.

"மன்னிக்கணும்ங்க. நான் என்னுடைய குருவை மறுத்துச் சொல்றதா நினைக்கப்படாது. அவர் ஏதாவது அவசரத்தில் இந்தக் குறிப்பைக் கவனிக்கத் தவறி இருக்கலாம். என்னுடைய சந்தேகம் எல்லாம் அந்தப் பொண்ணு பெரிய மனுஷி ஆகியிருக்குதாங்கறதிலேயே ஆரம்பிக்குது."

அந்த அரைகுறை ஜோஸியன் வேறெதுவும் சொல்ல வேண்டியிருக்கவில்லை.

ராஜேஸ்வரி ருத்ரதாண்டவமே ஆடிவிட்டாள்.

"உடனடியா அவள் அப்பனுக்கு ஃபோன் போட்டு வரச் சொல்லுங்க" என்றாள் உக்கிரமான குரலில்.

சிந்துவின் சார்பில் பேசிய யாருடைய பேச்சும் எடுபடவில்லை. போலி ஜாதகத்தைக் கொடுத்து ஏமாற்றிய குடும்பம் என்று அவளுடைய குடும்பத்தையே தாறுமாறாகப் பேச ஆரம்பிக்க, அதற்குமேல் பொறுக்க இயலாதவனாக பூமிநாதனே சிந்துவிடம், "நீ கொஞ்சநாள் உங்கப்பா கூடப் போய் இரு. இது சம்பந்தமா ஏதாவது ஒரு முடிவு எடுக்கலாம்" என்று சொல்லிவிட்டான்.

கனத்த நெஞ்சுடனும், தீர்மானமான முடிவுடனும் சிந்து தன் இறுதிப் பயணத்துக்குப் பெட்டியைத் தயார் செய்தது அதன் பிறகுதான்.

அந்தப் பயணம்தான் தீக்குளிப்பில் போய் முடிந்தது.

## 6

**சா**ப்பாட்டு மேசை முன் எல்லோரும் உட்கார்ந்திருந்தனர்.

அங்கே ஓர் அசாத்திய மௌனம் குடி கொண்டிருந்தது. குறிப்பாக பூமிநாதனின் இறுகிய முகம் மற்றவர்களுக்கு அவன் மீது ஓர் அனுதாபத்தை ஏற்படுத்தியது போல் இருந்தது. நான்கு நாட்கள் மதுரை ஆஸ்பத்திரியில் இருந்துவிட்டு நேற்று இரவுதான் திரும்பி இருந்தான் பூமிநாதன். முகத்தில் ஐந்து நாள் தாடி. களைப்பும் கவலையும் முழுதுமாக அவன் முகத்தை இருளடிக்க வைத்திருந்தன.

எல்லாம் பரிமாறப்பட்ட பிறகும் அவன் எதையும் தொடாமல் அப்படியே சிலை போல் எங்கோ வெறித்தபடி உட்கார்ந்திருந்தான்.

"தட்டைப் பார்த்து சாப்பிடுடா" என்றாள் ராஜேஸ்வரி.

ஏறிட்டு அவளை நோக்கினான் பூமிநாதன். கண்களில் பெருகி நின்றது நீர்.

திரும்பி அப்பாவையும் தம்பிகளையும் பார்த்தான்.

"எங்கே பார்த்தாலும் அந்தத் தீயின் ஜுவாலைகள்தான் ஓடுதுப்பா" என்றான் முணுமுணுப்பாக.

"என்னது?" என்றாள் ராஜேஸ்வரி.

அவளை அமைதியாக இருக்கும்படி சைகை செய்த சம்பத், ஆறுதலாக அவன் தோளின் மீது கையை வைத்தார்.

அழுகை உடைப்பெடுத்தது பூமிநாதனுக்கு.

"நான் பார்த்தேம்ப்பா. அவள் ஒரு பெரிய தீப்பந்தாக உருண்டு உருண்டு சுழன்றதை. அந்தக் காட்சியை மறக்கவே முடியலைப்பா. அவள் ஏம்ப்பா

அப்படிச் செய்தா? ஐயோ! ஐயோ" என்று முகத்தில் அறைந்துகொண்டு அழுதான்.

"அண்ணா" என்று தம்பிகள் மூவரும் அவரவர் இடங்களில் இருந்து எழ, பூமிநாதன் அதற்கு மேலும் அங்கே இருக்க முடியாதவன் போல் எழுந்து தன் அறைக்கு ஓடினான்.

அவனை யாரும் தொடரவேண்டாம் என்று சைகையால் தடுத்த சம்பத், ராஜேஸ்வரியை ஏறிட்டார். அவள் முகம் சாதாரணமாக இருந்தது.

"அம்மா! எப்படிம்மா சாதாரணமா இருக்க முடியுது உன்னால?" என்று கேட்டான் ஜவஹர்.

அவனை முறைத்தாள். "என்ன செய்யணும்ங்கற? அந்த மலட்டு மூதேவியை யார் சாகச் சொன்னது? எந்தப் பொண்ணும் அவள் அப்பன் வீட்டுக்கு போனா, சந்தோஷமா இருப்பாள்னு கண்டிருக்கு. அந்த ஜோஸியக்காரன் சொன்னதெல்லாம் உண்மைன்னு தானே இப்போ நிரூபணம் ஆகுது? அவள் யோக்கியம்னா, ஒரு டாக்டர்ட்ட காண்பிச்சு சர்டிஃபிகேட் வாங்கிட்டு வந்து, என் முகத்தில் வீசி இருக்க வேண்டியதுதானே? இவள் அங்கே போய் இப்படிப் பண்ணியிருக்காள்னா என்ன சங்கதியோ, யார் கண்டது? அதுக்காக நீங்க பட்டினி கிடந்து ஆகப் போறது என்ன?"

"அம்மா!" என்று குரல் எழுப்பினான் ரகு. "இப்படி அபாண்டமா பேசாதம்மா. அண்ணி ஆஸ்பத்திரியில தான் இருக்காங்க. செத்துப் போயிட்டாங்கன்னு நாக்கூசாமப் பேசற. சே"

"என்னடா திடீர்னு மதினிக்குப் பரிஞ்சிட்டு வர்ற?"

ராஜேஸ்வரியின் நாக்கு தடிக்கத் தொடங்கிவிட்டதை உணர்ந்த பாலன், திடுக்கிட்டான். இனி அம்மா தன்னிலை மறந்து ஆபாசமாகப் பேசக்கூடத் தயங்க மாட்டாள் என்று தெரியும். அவசரமாக ரகுவை அந்த இடத்திலிருந்து தள்ளிக்கொண்டு நகர்ந்தான்.

"ராஜி! நீ இன்னும் அவளை ஒருமுறை பார்க்கக்கூட இல்லை. நாளை பூமிநாதன் போகும்போது நாமும் போவோம். பத்து நிமிஷம் இருந்து பார்த்திட்டு வந்திடலாம். நீ மட்டும் பார்க்காமல் இருக்கறது நல்லா இல்லை" என்று மெதுவாக ஆரம்பித்தார் சம்பத்.

"அந்த மூதேவியை இப்போ நான் பார்க்க வரவே மாட்டேன். நீங்க எல்லாம் போய்ப் பார்த்தாச்சுல்ல? போதும். எப்படியும் சாவு செய்தி வரும். அப்போ போய்க்கலாம். அவன் மட்டும் போகட்டும்" என்று உறுமினாள்.

மற்ற இருவரும் ஸ்தம்பித்து நிற்க, "இப்போ என் வேண்டுதல் எல்லாம் அந்த சனியன் அப்படியே செத்துத் தொலைஞ்சிடணும்ங்கறதுதான். நல்லா இருந்த காலத்திலயே அவ வயித்துல ஒரு புழு பூச்சியைக் காணோம். அவ குணமாகித் தொலைஞ்சு கரிக்கட்டையா பேய் மாதிரி நடமாடி என்ன சாதிக்கப் போறா?" என்று சத்தமாகவே முணுமுணுத்தாள் ராஜேஸ்வரி.

## 7

நிசப்தமான இரவு.

திறந்திருந்த ஜன்னல் வழியாகத் தோட்டக் காற்று ஊய் ஊய் என்று அவ்வப்போது சப்தம் எழுப்பியபடி அடித்துக் கொண்டிருந்தது. தொலைவில் எங்கோ நாய் ஒன்று ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சத்தத்தில் விழித்துக் கொண்டாள் ராஜேஸ்வரி. அவளும் சரி, சம்பத்தும் சரி. எவ்வளவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும், சிறு சத்தத்துக்கும் விழித்து விடுவார்கள்.

தூக்கம் கலைந்த எரிச்சலோடு, ஜன்னலை மூடிவிட மறந்த எரிச்சலும் சேர்ந்து கொள்ள, சம்பத்தை எழுப்பி அதைச் செய்யுமாறு சொல்ல எண்ணினாள்.

அப்போதுதான் ராஜேஸ்வரியைக் கிசுகிசுப்பாக அழைத்தது அந்தக் குரல்:

"அத்தே"

திடுக்கிட்டாள்.

'யார்? எங்கிருந்து?'

மீண்டும் "அத்தே"

இது... இது... சிந்துவின் குரல் அல்லவா?

குப்பென்று வியர்த்தது ராஜேஸ்வரிக்கு.

இரவு விளக்கின் மங்கலான ஒளியில் படுத்த வாக்கிலேயே கண்களைச் சுழற்றிப் பார்க்க முயன்றாள்.

"இங்கே ஜன்னல் பக்கமாப் பாருங்க அத்தை"

மெல்ல கழுத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

ஜன்னலுக்கு வெளியே மங்கலாக ஏதோ ஓர் உருவம். சேலை காற்றிலாட நின்றிருந்தது. மிரண்டு போனாள் ராஜேஸ்வரி.

"நீ... நீ..." என்று நாக்குழறினாள்.

இரண்டு கைகளையும் அவளை நோக்கி நீட்டியபடி, "நான் தான் உங்க மூத்த மருமகள் வந்திருக்கேன். என்னை இப்படி அநியாயமா சாகடிச்சிட்டீங்களே, உங்களுக்கே இது சரியாப்படுதா?" என்று விசும்பத் தொடங்கியது அந்த உருவம்.

"யார் நீ? என் மருமக இன்னும் சாகலை. எனக்குத் தெரியும். அங்கே ஆஸ்பத்திரில கிடக்கா."

"நீங்க தானே அத்தை ஆசைப்பட்டீங்க, நான் செத்துப் போயிடணும்னு. தப்பித் தவறி பிழைத்து வந்தா தீக்காயங்களோட இருப்பேன். இவதான் என்

மருமகள்னு நாலு பேருக்கு அறிமுகப்படுத்தி வைக்க முடியாதபடி கோரமா இருப்பேன்னு"

"இல்லை. அது வந்து..."

"நான் இன்னும் அந்தக் கண்ணாடிப் பெட்டிக்குள்ள உயிரோட இருக்கறதாத்தான் எல்லோரும் நினைச்சிட்டிருக்காங்க. நான் செத்துப் போயாச்சு அத்தை. நீங்க என்னை ஏன் பார்க்கக்கூட வரலை? அதான் நானே உங்களைப் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். இப்போவாவது சந்தோஷமா இருக்கீங்களா அத்தை?"

ராஜேஸ்வரிக்கு படபடப்பாக இருந்தது. அவசரமாக இடது கையை நீட்டி அருகில் படுத்திருந்த கணவர் சம்பத்தை உலுக்கத் தொடங்கினாள். "என்னங்க, என்னங்க"

வெளியே நின்றிருந்த உருவம் சிரிக்கத் தொடங்கியது.

"யாரையும் எழுப்பாதீங்க அத்தை. உங்களால் முடியாது. மாமாவும் சரி உங்க பிள்ளைகளும் சரி, இப்போ ஆழ்ந்த மயக்கத்தில் இருப்பாங்க. நீங்க என்னதான் முயற்சி பண்ணி குரல் எழுப்பினாலும் அது உங்க தொண்டையை விட்டு வெளியே வராது. உங்க குரல் நானும் நீங்களும் பேசிக்கறதுக்கு மட்டும்தான்."

ராஜேஸ்வரிக்கு சப்த நாடியும் ஒடுங்கியது.

"உனக்கு... உனக்கு... என்ன வேணும்?" என்றாள் இறைஞ்சும் குரலில்.

"என்ன வேணும்?... ஹூம்.. இப்போ கேட்கறீங்களே, இதனை நான் உயிரோடு இருந்த நாட்களில் ஒரு முறையாவது கேட்டிருப்பீங்களா? "உங்க மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க அத்தை. நான் உங்களுக்கோ உங்க வீட்டுக்கோ அவமானம் வர்ற மாதிரி எதாவது செஞ்சிருக்கேனா? அப்புறமும் ஏன் அத்தை, சாவு வரைக்கும் விரட்டினீங்க? எவனோ ஒரு முட்டாள் ஜோஸியன் சொன்னது உங்களுக்கு வேதமாயிருச்சு, இல்லையா? இப்படி அநியாயமா என்னைக் கொன்னுட்டீங்களே!"

"நான் எங்கே கொன்னேன்? நீதானே தற்கொலை..." என்று தொடரப் போனவளை இடையில் வெட்டினாள் சிந்து.

"எனக்கென்ன ஆசையா தீப் பொருத்திக்கணும்னு? என்னை அந்த முடிவு எடுக்கச் சொல்லித் தூண்டியது நீங்கதானே?"

"நான் என்ன சொல்லிட்டேன்? உனக்குப் பிள்ளை பிறக்காததைச் சொல்லிக் காண்பித்தேன். அதுக்காக நீ இப்படிப் பண்ணிடறதா?"

"எவ்வளவு கேவலமாப் பேசினீங்க? எனக்குப் பிள்ளை பிறக்காததற்குக் காரணம் நீங்கதான். உங்களுக்குப் பேரப் பிள்ளைகளைக் கொஞ்சணும்னு பாக்கியம் இல்லை. உங்க சாவில் நெய்ப் பந்தம் பிடிக்க பேரப் பிள்ளைகள் இல்லைங்கறது உங்க விதி. வேணும்னா, அந்த முட்டாப்பய ஜோஸியன் கிட்ட

நான் இப்போ சொன்னது சரியான்னு பார்த்துக்கோங்க."

ராஜேஸ்வரிக்கு அச்சத்தையும் மீறிய கர்வத்தில நாக்கு துடித்தது.

"நீதான் செத்துப் போன? எனக்கு நான்கு மகன்கள் இருக்கானுங்க."

சிந்து சிரித்தாள்.

"நான்கு மகன்கள் இருக்கானுங்க என்கிற இதே நாக்கால், இருந்தானுங்க என்று சொல்கிற நிலை வருதா இல்லையா பாரு."

அவளுடைய பேச்சில் மரியாதை இறங்கி விட்டதைக் கவனித்த ராஜேஸ்வரி ஆடிப் போனாள்.

"என்ன சொல்ற?"

"எனக்குப் பிள்ளை இல்லாததால்தானே மலடின்னு சொன்ன? உனக்குப் பிறந்த பிள்ளைகளை இல்லாமல் ஆக்கப் போறேன். பெத்தவ உயிரோட இருந்து பிள்ளைகளைப் பறி கொடுக்கறது எவ்வளவு மோசமான நிலை? அதை நீ அனுபவிக்கப் போற. நாலு பிள்ளைகளையும் தூக்கிக் கொடுத்திட்டு என்னைப் பேசிய பேச்சுக்களுக்கான பலன் இதுதான்னு புலம்பிட்டு இருப்ப. அப்படிப்பட்ட நிலையில் உன்னை எப்படி சொல்லிக்கறதுன்னு தமிழில் புது வார்த்தை கண்டுபிடித்து வை. அதுதான் உனக்கான விதி"

"ஐயோ" என்று அலறியவளாகக் காதுகளைப் பொத்திக் கொண்டாள் ராஜேஸ்வரி கண்ணிமைக்கும் நேரத்தில் சிந்துவின் உருவம் அங்கிருந்து மறைந்தது.

"என்னங்க" என்று உலுக்க, சம்பத் பதறி அடித்து எழுந்தார்.

"என்ன?"

"அந்த மூதேவி செத்துட்டாள்னு நினைக்கிறேன். நீங்க அந்த ஆஸ்பத்திரிக்கு ஃபோன் பண்ணிக் கேளுங்க."

சம்பத் மணி பார்த்தார். இரண்டரை.

"உனக்கென்ன கிறுக்கு பிடிச்சிருக்கா? எதாவது கனவு கினவு கண்டியா? அப்படி ஏதாவதுன்னா, சம்பந்தி அங்கேதான் இருக்கார். அவர் ஃபோன் பண்ணிச் சொல்லுவார். நீ பேசாமல் தூங்கு. ராத்திரி ரெண்டரை மணிக்கு என் உசிரை வாங்காதே".

"ஐயோ, புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்களே, இப்போதான் அவ ஆவியா வந்து என்கிட்ட மிரட்டிட்டுப் போனா."

சம்பத் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். "ராஜி! என்ன சொல்ற?"

ராஜேஸ்வரி நடந்தவைகளைச் சொன்னாள்.

"என்னை எழுப்பி இருக்க வேண்டியதுதானே?"

"உலுக்கி உலுக்கிப் பார்த்தேனே, நீங்க அசையவே இல்லை. அலறிக்கூடப்

பார்த்தேன்."

"என்ன சொல்ற நீ? சின்ன சத்தத்துக்கே முழிச்சிருவேன் நான். நீ அலறியா முழிக்காமல் இருப்பேன்?"

"அவள் மிரட்டி இருந்தாங்க, நான் எவ்வளவு அலறினாலும், சத்தம் எழவே எழாதுன்னு. அது சரியாப் போச்சு?"

ராஜேஸ்வரி முந்தானையால் கழுத்து வியர்வையைத் துடைக்க முயன்றாள். அப்போதுதான் தெரிந்தது, அவளுடைய உடம்பு முழுதுமே வியர்வையால் குளித்தது போல் தொப்பலாக நனைந்திருந்தது.

மேலே மின்விசிறியும் முழு வேகத்தில் சுற்றிக் கொண்டிருந்தது.

அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த சம்பத் மெல்ல எழுந்து போய் பூஜை அறையில் இருந்து திருநீற்றை எடுத்து வந்து, அவளுடைய நெற்றியில் பூசிவிட்டார்.

"சிவசிவான்னு சொல்லிட்டு தூங்கு. எதையாவது நினைச்சு குழப்பிட்டு இருக்காதே."

"என்னங்க, அவ நிஜமாவே இந்த சமயத்தில் உயிரோட இல்லை. செத்தாத் தானே இப்படி ஆவியா வர முடியும்?"

அவளைப் பரிதாபமாகப் பார்த்தார் சம்பத். மெல்லத் தட்டிக் கொடுத்தார்.

## 8

பெட்டியில் எடுத்து வைத்த எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டான் பாலன். "பார்த்துடா, பாஷை தெரியாத ஊர். எங்கேயாவது பராக்குப் பார்த்திட்டு பஸ்ஸைக் கோட்டை விட்டுடாதே. எப்பவும் நாலஞ்சு பசங்களோட சேர்ந்தே இரு. புரியுதா?" என்றெல்லாம் அறிவுரைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தாள் ராஜேஸ்வரி.

"சரி, சரி" என்று எல்லாவற்றிற்கும் தலையாட்டிக் கொண்டிருந்தான் பாலன்.

"டெல்லில எதுடா சீப்பாக் கிடைக்கும்?"

"ஏன் கேட்கற?"

"ஞாபகார்த்தத்துக்கு வாங்கிட்டு வரச் சொல்றதுக்குத்தான்."

"ம். இன்னிக்குத் தேதில மத்திய மந்திரி பதவி தான் சீப்பாக் கிடைக்குதுன்னு பேசிக்கிட்டாங்க" என்று கிண்டல் அடித்தான் ஜவஹர்.

"ஜனாதிபதியைப் பார்க்கப் போறீங்களா?"

"இல்லாமலா? நம்மூர்க்காரர். உலக அரங்கில் நம்ம நாட்டைத் தலை

நிமிர வைத்தார். சிந்தனாவாதி. எழுத்தாளர். தகுதிகள் மிகுந்த பாரத ரத்னா. எல்லாவற்றிற்கும் மேலா மாணவர்கள் மீதும் இளைஞர்கள் மீதும் முழு நம்பிக்கை வைத்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வருபவர். அவரைப் பார்க்காமல் எங்கள் பள்ளியின் டெல்லி சுற்றுலா நிறைவு பெறுமா என்ன?"

வாசலில் வேனின் ஹாரன் ஒலி கேட்டது.

"போச்சு, லேட்டாயிருச்சு. பேசிப் பேசியே நேரத்தைக் கொன்னுட்டீங்க. நான் கிளம்பறேன்" என்று சூட்கேஸைத் தள்ளிக் கொண்டு வாசலுக்கு விரையப் போனான் பாலன்.

"டேய்.. டேய். நீ இன்னம் சாப்பிடலை. ஒரு வாய் சாப்பிட்டுப் போடா" என்ற ராஜேஸ்வரியின் அலறலை அவன் சட்டையே செய்யாமல் விரைந்து சென்று நண்பர்கள் நிறைந்திருந்த வேனில் ஏறிக் கொண்டான்.

பத்து நாட்கள் கழித்தும், பாலன் வீட்டுக்கு வரவில்லை. பள்ளியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சம்பத், பேசி முடித்தவுடன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

"என்னங்க, என்னாச்சு?" என்று ராஜேஸ்வரி பதற, மகன்கள் எல்லோரும் கூடி விட்டனர்.

"அப்பா! என்னாச்சு?"

ஜவஹர் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, வாங்கிக் குடித்தார். கொஞ்சம் தெளிவாகி, எழுந்து உட்கார்ந்தார்.

"பசங்க எல்லாரும் நேத்திக்கு இரவே வந்துட்டாங்களாமே."

"என்னது?"

"அது மட்டுமில்லை. பாலன் இந்த டூரிலயே கலந்துக்கலியாம்."

எல்லோர் முகமும் அதிர்ச்சியில் உறைந்தது.

"என்ன சொல்றீங்க? அன்னிக்கு நம்ம முன்னால்தானே வேகமாய்ப் போய் வேனில் ஏறினான்?"

"அதுதான் ஒண்ணுமே புரியலை" என்று தலையைத் தேய்த்துவிட்டுக் கொண்டார் சம்பத்.

"கொஞ்சம் இருங்க, நான் போய் அவனோட நண்பன் ஹரிகிட்ட விசாரிச்சுட்டு வர்றேன்" என்று சட்டையை மாட்டிக்கொண்டு அவசரமாகக் கிளம்பினான் ரகு.

அவன் திரும்பி வரும்வரை, திக் திக்கென்று உட்கார்ந்திருந்தனர் மற்ற நால்வரும். ராஜேஸ்வரி அதற்குள் இரண்டு பாட்டம் அழுது தீர்த்துவிட்டாள்.

அரை மணி நேரத்துக்குள் திரும்பி வந்தான் ரகு. அவனுடைய முகம் இறுகி இருந்தது.

"என்னடா சொன்னான் அந்தப் பையன்?"

"அன்னிக்கு நம்ம பாலன் வேல்ல போனானில்லையா. இங்கிருந்து ரெண்டு தெரு தாண்டி கூட்டு ரோடு ஜங்ஷன்கிட்ட வேனை ஒரு பொண்ணு நிறுத்திச்சாம். அவளைப் பார்த்ததும் பாலன் தன் பையோட இறங்கிட்டானாம்."

"என்னடா சொல்ற?"

"ஆமாம்ப்பா. கொஞ்ச தூரம் தள்ளி ஓரமாப் போய், அந்தப் பொண்ணுகூடப் பேசிட்டுத் திரும்பி வந்து, 'நான் அநேகமா டூருக்கு வர மாட்டேன்னு நினைக்கிறேன். நீங்க எல்லோரும் போங்க. சார் கிட்ட எங்க வீட்டில் ஒரு முக்கியப் பிரச்னைன்னு சொல்லிடுங்க'ன்னு சொல்லிட்டு, அந்தப் பொண்ணு கூடவே போயிட்டானாம்."

"இது என்னங்க புதுக் கரடியா இருக்கு? நம்ம பாலனா? அதும் பொண்ணு சிநேகிதமா? கடவுளே" என்று தலையில் அடித்துக் கொண்டாள் ராஜேஸ்வரி.

ரகு அம்மாவையும், அப்பாவையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தான்.

"அந்தப் பொண்ணு யாருன்னு பாலன்கிட்ட கேட்டானாம். அதுக்கு பாலன், இவங்கதான் எங்க அண்ணி சிந்துன்னு சொன்னானாம்."

"ஐயோ! கடைசியில் அந்தப் பிசாசு சொன்னது போலவே ஆயிடுச்சா?" என்ற ராஜேஸ்வரி, அப்படியே மயங்கி விழுந்தாள்.

வீடு பரபரப்பானது. அவளைப் படுக்க வைத்து முகத்தில் தண்ணீர் தெளித்து ஆசுவாசப்படுத்தி எழ வைத்தார்கள்.

"என்னவோ மாய்மாலம் நடக்குதுங்க. உடனடியா விசாரிங்க. அந்தச் சனியன் இன்னும் உயிரோடதான் இருக்காளான்னு. அன்னிக்கு நான் அவ ஆவியா வந்து மிரட்டினாள்னு சொன்னப்போ நம்பாமல் சிரிச்சீங்களே, இப்போ அதுதான் உண்மையாயிருக்கு. கடவுளே!" என்று புலம்பித் தவித்தவளை "நீ கொஞ்ச நேரம் சும்மா இருக்கியா? என்ன செய்யறதுன்னு எங்களை யோசிக்க விடப் போறியா இல்லையா?" என்று கடிந்தார் சம்பத்.

"இதுல யோசிக்க என்ன இருக்கு? உடனடியாப் போலீஸைக் கூப்பிடுங்க. என் மகனை யாரோ பொடிவச்சுக் கடத்திட்டாங்க. எனக்கு அவனை உடனடியாப் பார்க்கணும். அவன் எனக்கு வேணும். டேய் ஜவஹர் போலீஸுக்குப் போடா" என்று கத்த ஆரம்பித்தாள்.

சம்பத் அமைதியான யோசனையுடன் எழ, "அப்பா! எங்கே கிளம்பறீங்க?" என்று தடுத்தான் ஜவஹர்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கு"

"அங்கே போய் என்ன சொல்லுவீங்க?"

"என் பையனைக் காணோம்னு புகார் கொடுப்பேன்"

"அப்பா! அதுக்கப்புறம் என்னென்ன ஆகும்னு யோசிச்சீங்களா? போலீஸ் நம் வீட்டோட ஆதிக்கதையை எல்லாம் கிளறுவாங்க. பாலனை ஏன் உங்க மருமகள் கூட்டிப் போயிருக்கக் கூடாதுன்னு கேப்பாங்க. அவள் ஆஸ்பத்திரில

கோமால இருக்காள்னு சொல்லுவீங்களா? அவங்களுக்கு அந்த நிலைமை ஏன் ஏற்பட்டுதுன்னு கேட்பாங்க. அண்ணி தீக்குளிச்ச கதை சந்திக்கு வரும். அதைப் பெருந்தன்மையா பூமிநாதனோட மாமனார் போலீஸ் கேஸாக்காமல் சிகிச்சை கொடுத்திட்டு இருக்கார்னு உங்களுக்குத் தெரியும். போலீஸுக்கு ஒரு நூல் கிடைச்சாப் போதும். அதன் பின்னணியை விசாரிக்கறேன்னு இறங்கினாங்கன்னா, அவங்களுக்கு பாலன் காணாமல் போனதைவிட அண்ணியின் தீக்குளிப்பு ஜாலியான கேஸாயிடும். பத்திரிகைகள் சந்தோஷமா கதை போட ஆரம்பிச்சுடுவான். அம்மாவைப் பற்றி நம்ம சொந்தக்கார வட்டத்தில் கேட்டா, புட்டுப் புட்டு வைப்பாங்க. இவ்வளவுக்கும் தயாரான்னு யோசிச்சுக்கிட்டு போலீஸுக்குப் போங்க."

இடிந்துபோய் உட்கார்ந்தார் சம்பத்.

ராஜேஸ்வரியும் வாயடைத்துப் போனாள்.

"என்னதாண்டா பண்றது?"

"அதைத்தான் நானும் யோசிச்சிட்டிருக்கேன். எனக்கும் ஒண்ணும் தோணலை. இப்போதைக்கு விடுங்க. பாலன் எங்கேயோ நல்லாத்தான் இருக்கான்னு தெரியுது. அவனைக் கடத்திட்டுப் போனவங்களோட சந்தோஷமாப் போயிருக்கான்னா அவனுக்கு நிச்சயமா ஆபத்து இருக்க வாய்ப்பு இல்லை. அண்ணின்னு யாரையோ சொல்லி இருக்கான்ங்கறதுதான் உதைக்குது."

ஆளாளுக்குப் பேசியதில் முடிவாகக் குழப்பமே மிஞ்சியது. ஆனால், ஒரு விஷயத்தில் எல்லோரும் ஒற்றுமையாக இருந்தனர். அது இப்போதைக்கு போலீஸுக்குப் போக வேண்டாம் என்பதுதான்.

## 9

ராஜேஸ்வரி மட்டும் வீட்டில் தனியாக இருந்தாள். பகல் நேரம்.

தொலைக்காட்சியின் அலைவரிசைகளை மாற்றி மாற்றிப் பார்த்தாலும், எல்லாவற்றிலும் ஒன்று போல ஏதாவது ஒரு பெண் சொல்லி வைத்ததுபோல் அழுதபடி இருந்தாள்; அல்லது சபதமிட்டுக் கொண்டிருந்தாள். ராஜேஸ்வரி எந்த ஒரு நிகழ்ச்சியிலும் மனம் ஒன்றாமல் அலைக்கழிந்து கொண்டிருந்தாள்.

தொலைபேசி கிணுகிணுத்து அழைத்தது. அது உள்ளூர் அழைப்பு அல்ல; வெளியூர் அழைப்பு என்றுகூடக் கண்டு கொள்ளாமல், இரண்டு மூன்று அழைப்புகளையும் பொருட்படுத்தாமல் அசட்டையாக இருந்தவள், வேறு யாரும் இல்லை என்பது ஞாபகம் வந்தவளாக, எழுந்துபோய் எடுத்தாள்.

"அம்மா! என்ன பண்ணிட்டிருந்த? ஃபோனை எடுக்க இவ்வளவு நேரமா?" என்றது மறுமுனை.

பாலனின் குரல்!

ராஜேஸ்வரியின் உடலெங்கும் திடீரென்று ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்த அதிர்வு.

கண்கள் சட்டென்று பொங்க, "பாலன்! நீயாடா பேசற? எங்கிருந்து பேசற? ஏண்டா, நீ அந்தச் சுற்றுலாக் குழுவோட போகவே இல்லையாமே. எவளோ ஒரு பொம்பளை உன்னை வழில இறக்கிக் கூட்டிட்டுப் போனாளாமே. அவதான் உன் அண்ணி சிந்துன்னு சொன்னியாமே. என்னடா விளையாடறியா? நீ காணாமல் போயிட்டன்னு கண்டமா? எங்கேன்னு தேடறது? என்னன்னு முடிவு பண்றது நாங்க? கொஞ்சமும் பொறுப்பில்லாமல் இப்படி நடந்தா என்னடா அர்த்தம்? நான் தவிச்ச தவிப்பு அந்த ஆண்டவனுக்குத்தாண்டா தெரியும். எங்கேடா இருக்கிற? உன்னைக் காணாம நாங்க யாருமே நிம்மதியா இல்லைடா. உன்னை உடனடியாப் பாக்கணும் போல என் பெத்த வயிறும் மனசும் கிடந்து துடிக்குதுடா. உடனே வாடா..." என்று அவனைப் பேச விடாமல். தானே கொட்டித் தீர்க்க ஆரம்பித்தாள்.

"அம்மா! என்னைக் கொஞ்சம் பேச விடறியா?" என்று குறுக்கே வெட்டி நிறுத்தினான் பாலன்.

"டெல்லில ஷாப்பிங் போயிருந்த இடத்தில். எவனோ திருட்டுப் பயல் ஏதோ பொடியை என் முகத்தில் விசி மயக்கமடைய வச்சு, தூக்கிட்டுப் போயிட்டான்னு நினைக்கிறேன். என் கழுத்து செயின் மோதிரம், வாட்ச் பர்ஸ் எல்லாத்தையும் எடுத்துட்டு, நகருக்கு வெளியே எங்கேயோ தூக்கி வீசிட்டுப் போயிட்டான். எனக்கு நினைவு திரும்பினப்புறமும் நான் யாருன்னு தெரியாதபடி ஒரு மயக்க நிலைலதான் இருந்தேன். ஒரு பஞ்சாபிக் குடும்பத்துக்காரங்க தான் என்னைக் காப்பாத்தி சாப்பாடு போட்டு, வைத்தியம் பண்ணி... இப்போ நான் பத்திரமா நல்லா இருக்கேன். அப்பா எங்கே கூப்பிடு. அவர் கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்."

"என்னடா சொல்ற? நீ டெல்லிக்கு எப்படிப் போன?"

"என்னை நீங்கதானே சுற்றுலா அனுப்பினீங்க?"

"அது சரிடா. உன் நண்பன் ஹரிதான் நீ இங்கேயே கழண்டுக்கிட்டதா சொல்லியிருக்கானே?"

"சம்பந்தமில்லாமல் பேசாதம்மா. ஹரிதான் சுற்றுலாவுக்கு வரலை. சரி அதை அப்புறம் பேசலாம். அப்பா கிட்ட ஃபோனைக் கொடு"

ராஜேஸ்வரிக்குத் தலை சுற்றாத குறை. என்ன சொல்கிறான் இவன்?

"அம்மா! என்ன பண்ற? இங்கே எஸ்.டி.டி பில் ஏறிட்டிருக்கு"

"பாலா! இப்போன்னு பார்த்து வீட்டில் யாரும் இல்லையே. அப்பா இன்னும் மதியச் சாப்பாட்டுக்கு வரலை. அவர்கிட்ட என்ன பேசப் போற? எங்கருந்துடா பேசற? வீட்டுக்கு வர்றதுக்கென்ன?"

"எப்படிம்மா வருவேன்? கையில் பத்து பைசா இல்லை. டெல்லில இருக்கேன். அப்பா கிட்ட சொல்லி எனக்கு உடனடியா தந்தி மணியார்டர் பண்ணச் சொல்லு."

"அட்ரஸ் சொல்லுடா குறிச்சுக்கறேன். கொஞ்சம் இரு. பேப்பரும் பேனாவும் எடுத்துக்கறேன்" என்றவளாக ரிஸீவரை வைத்துவிட்டு ஓடிப் போய் ஒரு தாளும் பேனாவும் எடுத்து வந்து மீண்டும் ரிஸீவரை காதுக்குக் கொடுத்த போது தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

"பாலா! பாலா!" என்று அலறிப் பார்த்தவள், தவிப்பு குறையாமல் தொலைபேசியையே பார்த்தபடி சிலை போல் அமர்ந்திருந்தாள், பல நிமிட நேரமாக.

மீண்டும் அது ஒலிக்கவே இல்லை.

சம்பத் வந்ததும் ஓடிப் போய் அவரைக் கட்டிக் கொள்ளாத குறையாக,

"என்னங்க! நம்ம பாலன் பத்திரமா இருக்காங்க. இப்போதான் ஃபோன் பண்ணினான். டெல்லில யாரோ காவாலிப் பய்லுக கடத்திட்டுப் போயிட்டானுங்க போல. இப்போ பத்திரமா இருக்கானுங்க. ஃபோன்ல தெளிவாப் பேசினான். பாவம், வீட்டுக்கு வர்றதுக்குக் காசு இல்லையாம். பணம் அனுப்பச் சொன்னான். அட்ரஸ் சொல்றதுக்குள்ள லைன் கட்டாயிருச்சு. திரும்ப பண்ணுவான்னு நினைச்சு உட்கார்ந்தே இருக்கேன்..." என்றாள் உற்சாகமாக.

"என்ன உளர்ற? அவன் எங்கே டெல்லி போனான்? அவன் தான் வழிலலே இறங்கிட்டான்னு அவனுடைய நண்பன் ஹரி சொன்னானே! ஏதாவது கனவு கண்டியா?'

"ஐயோ! இல்லீங்க. 'அவன்' சொல்றான் ஹரிதான் டெல்லிக்குப் போகலையாம். இவன் போயிருக்கான்..." என்று தொடங்கி தொலைபேசியில் பாலனுடன் பேசிய அனைத்தையும் விவரித்துச் சொன்னாள்.

சம்பத்தின் முகமும் மலர்ந்தது. "கடவுளே!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார். "நான்தான் முதலிலேயே சொன்னேனே, எங்கேயாவது மிஸ் ஆயிருப்பான். வந்திருவான்னு. நீ தான், கனவு ஆவி பூதம்னு பயமுறுத்தி விட்டுட்ட" என்றார் மனைவியை லேசாகக் கடிந்து கொள்ளும் குரலில். உள்ளூர, அவன் எப்படி டெல்லிக்குப் போனான்? அப்படியென்றால் ஹரி சொன்னது பொய்யா? ஹரி ஏன் பொய் சொல்ல வேண்டும் என்கிற கவலை சூழ்ந்த எண்ணங்கள் வர அவற்றை வெளியே காட்டினால்,

இப்போது மற்றவர்கள் முகத்தில் இருக்கும் உற்சாகம் பாதிக்கப்படுமே என்று உள்ளுக்குள் அடக்கிக் கொண்டார். ராஜேஸ்வரி லேசாக வெட்கப்பட்டது போல் மனம் லேசாகிச் சிரித்தாள்.

"அந்த மலட்டு மூதேவி சிந்துவின் ஆவி வந்து பேசினது என் பிரமைங்கறீங்களா?"

"போச்சுடா, திரும்ப ஆரம்பிச்சுடாதே, இப்போ நம்ம பாலன் பத்திரமா இருக்கான்ங்கறதுல நம்பிக்கை வந்தாச்சில்லையா? அதோட பேச்சை விடு" என்றார் மேற்கொண்டு வளர்க்க விரும்பாமல்.

இருண்டாற்போல் இருந்த வீட்டில் எல்லோர் முகங்களிலும் கொஞ்சம் வெளிச்சம் வந்திருந்தது. ஜவஹரும், ரகுவும் பாலனின் முகவரி வாங்கத் தவறியதற்காக அம்மாவைக் கோபித்துக் கொண்டனர். பூமிநாதன் கூட சிந்துவின் நினைவிலிருந்து கலைந்தவன் போல் பாலனின் வரவு குறித்து ஆர்வத்துடன் விசாரித்தான்.

எல்லாம் இரவு வரை தான். ஒன்பது, பத்து பதினொன்று என்று நேரம் ஆக, ஆக ஒவ்வொருவராக ஆர்வம் குறைந்து வேறு கோணத்தில் பேச ஆரம்பித்தார்கள்.

"அம்மா! நீ நல்லா கவனிச்சியா? பால்னின் குரல்தானா?

"அவன்தான் டெல்லிக்கே போகலைன்னு ஹரி சொல்லியிருக்கானே, அங்கே இருந்து எப்படிப் பேசியிருப்பான்?"

"சும்மா இருங்கடா" என்று சம்பத் அடக்கினார் அவர்களை.

மேலும் ஃபோன் வரும்னு தோணலை ராஜி. எப்படியோ பாலன் பத்திரமா இருக்கான்னு தெரிஞ்சு போச்சில்லையா? அந்த நிம்மதியோட நீயும் தூங்கு. நாளைக் காலைல் ஃபோன் வருதான்னு பார்க்கலாம்." என்று மனைவியை சாந்தப்படுத்தியவராக சம்பத்தும் படுத்துவிட்டார்.

"என்னங்க, உங்களுக்கு நம்பிக்கை இருக்கில்லையா நான் பொய் சொல்லலைன்னு"

"சேச்சே"

ஆனால் மறுநாளும் ஃபோன் வரவில்லை. ராஜேஸ்வரி கிட்டத்தட்ட பாத்ருமுக்குக் கூடப் போகாமல் தொலைபேசிக்கு அருகிலேயே தவம் கிடந்தாள். ஏக்கம், கோபம், பத்தறம், கொஞ்சம் பயம் என்று பல்வேறு உணர்ச்சிகளின் கலவையாகத் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பயந்து சம்பத் அலுவலகம் போகாமல் விடுப்பு எடுத்து வீட்டிலேயே அவளுடன் உட்கார்ந்து தொலைபேசியையும், அவளையும் பார்த்துக் கொண்டிருந்தார். செய்தித் தாளைப் புரட்டினால் கூட, உங்களுக்குப் பையன் மீது கொஞ்சமாவது அக்கறை இருக்கா?" என்று திட்டினாள் ராஜேஸ்வரி.

மத்தியான சாப்பாட்டு நேரத்தில் ராஜேஸ்வரி அழுதே விட்டாள்.

"கலைப்படாதே ராஜி! ஒருவேளை அந்த பஞ்சாபிக் குடும்பத்துக்காரங்க நம்ம பாலனை ரயிலேத்தி அனுப்பி விட்டாங்களோ என்னவோ, அதனால ஃபோன் பண்ண முடியாமல் போயிருக்கலாம். அவன் ரயிலில் வந்து கொண்டிருந்தால் நாளைக் காலையில் வந்து நிற்பான் பார்" என்றார் தேற்றும்

குரலில்.

ராஜேஸ்வரிக்கு இந்த ஆறுதல் புதுத் தெம்பினைத் கொடுத்தது.

“அப்படித்தான் இருக்கும்” என்று சமாதானமாகிக் கொண்டாள்.

எல்லோரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த இரவில் ஜன்னல் பக்கமாக யாரோ மெல்லிய குரலில் அழைப்பது போன்ற உணர்வில் விழித்துக் கொண்டாள் ராஜேஸ்வரி.

அவசரமாகக் கையைத் துழாவி அருகில் கணவர் இருக்கிறாரா என்று பார்த்துக் கொண்டாள்.

“ராஜேஸ்வரி”

அதே அழைப்பு. பயத்தில் மனம் திக் திக்கென்று அடித்துக் கொள்ள கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாமல் கிடக்க முயன்றாள்.

“உன்னால் தூங்க முடியாதுடி. எழுந்திரு. என் பக்கமாகப் பார்”

மெல்லத் திரும்பினாள்.

ஜன்னலுக்கு வெளியே கறுப்பாக ஓர் உருவம்.

“நீ… நீ…” என்று நாக்குழறினாள் ராஜேஸ்வரி.

“நானே தான். உன் மருமகள் சிந்துவே தான். என்ன நிம்மதியாத் தூங்க ஆரம்பிச்சுட்ட? நான் சொன்ன மாதிரி உன் கடைசிப் பிள்ளை சாகலை, உயிரோட தான் இருக்கான். உன் கூடப் பேசினான்னு தெம்பாயிட்டயா?”

ராஜேஸ்வரி நடுக்கம் மறைத்தவளாக அமைதியாக இருந்தாள்.

“உன் கூடப் பேசின மகன் ஏன் இன்னும் வந்து சேரலை? திரும்பவும் ஏன் பேசலை? உன்னிடம் மட்டும் ஏன் பேசினான்? அண்ணன்கள், நண்பர்கள்னு யார் கூடவும் ஏன் பேசலை? கையில் காசு இல்லாதவனுக்கு ஃபோன் பண்ணுவதற்கு மட்டும் எங்கிருந்து வந்ததாம் காசு? இதையெல்லாம் யோசிச்சியாடி முட்டாளே!”

ராஜேஸ்வரிக்கு வியர்த்தது.

“ஹா ஹா” என்று சிரித்தாள் சிந்து.

“அந்த ஃபோன் காலே உன் மனப்பிரம்மை. உன் மகன் செத்தவன் செத்ததுதான். அவன் போகும் வழியில் வேனில் இருந்து இறக்கிக் கூட்டிப் போனது யாராயிருக்கும்னு யோசிச்சியா? நான்தான் அது. இல்லைன்னா உன் சாப்பாடு கூட வேண்டாம்னு ஓடினவன் வேனை விட்டு இறங்கி இருப்பானா? அவன் எங்கே டெல்லிக்குப் போனான்? இந்த பூமியில் தான் அவன் கதை முடிந்திருக்கிறது. அவன் உடம்பு கூடக் கிடைக்காம நீ தவிக்கணும். அதைவிடக் கொடுமை அவன் செத்துட்டான்ங்கறதுக்கு என் வார்த்தைகள் மட்டுமில்லாமல் வேறு சாட்சியே இல்லாமல் நீ தவிக்கணும். தவி நல்லா தவிச்சு அழு…”

திடீரென்று அடித்த மின்னலில் அந்த உருவம் தெரிய ஓவென்று

அலறினாள் ராஜேஸ்வரி.

பதறி எழுந்து விளக்கைப் போட்டார் சம்பத்.

"என்னாச்சு?" என்று உலுக்கினார் அவளை.

"அங்கே, அங்கே" என்று அவள் காட்டிய திக்கில் ஜன்னல் பக்கம் யாருமே இல்லை.

"ஐயோ, நான் அவளைப் பார்த்தேன். உடம்பெல்லாம் தீக்காயத்தால் அழுகி வெந்திருக்கும் காட்சியோட அவள் அங்கே நின்னு என்னிடம் பேசினா..."

சத்தம் கேட்டு மகன்களும் எழுந்து ஓடிவர, ராஜேஸ்வரி அழ ஆரம்பித்தாள்.

அவளைத் தேற்ற படாத பாடு பட்டார்கள் பிள்ளைகளும், கணவரும்.

"அம்மா! ஒண்ணு சொன்னாக் கோவிச்சுக்க மாட்டியே" என்று ஆரம்பித்தான் பூமிநாதன்.

பேசாதவன் பேச ஆரம்பித்ததால் அனைவரும் கவனமாகக் கேட்டனர்.

"நான் என்ன சினிமாவிலயும், கதைகள்லயும் வர்ற மாதிரி சிந்துவைக் காதல் கல்யாணமா செய்து கொண்டேன். உங்க எல்லோர் எதிர்ப்பையும் மீறி? அவளை நீயாகத்தானே பெண் பார்த்து எனக்குக் கட்டி வைத்தாய்? நான் அவளையே மணப்பேன் என்று ஏதாவது தீவிரம் காட்டினேனா? கல்யாணத்துக்கப்புறம் அவள் மீது அதிகப் பிரியம் காட்டி உங்களில் யாரையாவது, குறிப்பாக உன்னை ஒதுக்கினேனா? அவள்தான் உங்களிடமிருந்து என்னைப் பிரிப்பது போல் நடந்து கொண்டாளா? தனிக் குடித்தனம் செல்லத்தான் தூண்டினாளா? எங்களுக்குக் கல்யாணம் நடந்து என்ன பதினைந்து வருடங்களா முடிஞ்சிருக்கு? அதுக்குள் குழந்தை உண்டாகலைங்கற ஒரே காரணத்தைக் காட்டி நல்ல பெண்ணை மலடி மலடின்னு சொல்லியே புண்படுத்தி தீக் குளிக்கற அளவுக்கு விரட்டிட்ட, அவளும் இன்னிக்கோ, நாளைக்கோன்னு உயிரோடு போராடிட்டிருக்கா. அவள் செத்திடுவான்னு நானே நினைக்கிற அளவில் தான் அவளுடைய உடல்நிலை இன்னிக்குத் தேதியில் இருக்கு. ஆனாலும், இன்னும் அவள் சாகலை. உயிரோட இருக்கிறவளை ஆவியாப் பார்த்தேன். பேயாப் பார்த்தேன்னு சொல்லி இன்னும் ஏம்மா அவளைக் கேவலப் படுத்தற? இனியும் இங்கே அடிக்கடி வந்து என் சிந்துவைப் பற்றிப் பேசப்படுகின்ற தவறான பேச்சுக்களைக் கேட்டு சகித்துக் கொண்டிருக்கும் மனநிலை எனக்கு இல்லை. நான் நாளை விடிஞ்சதும் மதுரைக்குப் போறேன். தன் மகளின் அருகில் கண்ணீரும், நம்பிக்கையுமா தனியா உட்கார்ந்திருக்காரே என் மாமனார், அவருக்குத் துணையா இருக்கப் போறேன். என்னை மன்னிச்சுருங்க." என்றவனாக அந்த அறையிலிருந்தே வெளியேறினான், பூமிநாதன்.

"இவன் என்னங்க என்னவோ உலகத்துல இல்லாத பொண்டாட்டி கூட ஆயிரம் வருஷம் வாழ்ந்தவனாட்டம் அலட்டிக்கறான். இப்போ நான் என்ன

தொடர்ச்சி 36-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லிட்டேன்? அவளை ஆவியா நான் பார்த்தது, எனக்கு என்ன பொய்க் கதை சொல்லி என் தூக்கத்தையும் கெடுத்து உங்க எல்லார் தூக்கத்தையும் கெடுக்கணும்னு தலையெழுத்தா? என்றாள் ராஜேஸ்வரி.

"அம்மா சொல்றது சரிதானோன்னு படுதுப்பா" என்று இழுத்தான் ரகு.

"என்னடா சொல்ற?"

"ஆமாம்ப்பா. அன்னிக்கு பாலன் ஃபோன்ல பேசினான்னு அம்மா சொன்னதுக்கு மறுநாள் நான் திரும்பவும் போய் ஹரி கிட்ட கேட்டேன். அவன் அன்னிக்கு சொன்னதையேதான் திரும்பவும் சொன்னான். அதோட அவன் டெல்லிக்குப் போனதுக்கு ஆதாரமா அங்கே பள்ளி நண்பர்கள் ஆசிரியர்கள் எல்லோரும் முக்கியமான இடங்களில் எடுத்துக் கொண்ட புகைப் படங்களையும் காண்பித்தான்."

எல்லோரும் யோசனையில் ஆழ்ந்தனர்.

"பாலனைக் கூட்டிப் போன பெண் யாருன்னு எப்படிக் கண்டுபிடிக்கிறது?"

"அதையும் கண்டு பிடிச்சிட்டேன். நான் இந்த முறை அவனைப் பார்க்கப் போன போது அண்ணியின் புகைப்படத்தையும் எடுத்திட்டுப் போயிருந்தேன். அவனிடம் காட்டினேன். பாலனை வேனில் இருந்து இறக்கிக் கூட்டிப்போனது இவங்கதான்னு அவன் அடிச்சுச் சொன்னான்."

"மை காட்" என்று வாயில் கைவைத்தார் சம்பத்.

என்னப்பா நடக்குது? என்ன பண்றதுன்னு யோசிக்கவே முடியலையே"

"அம்மா! நாளைக்கு நாம் எல்லோரும் மதுரைக்குப் போய் அண்ணியை எதுக்கும் ஒருமுறை பார்த்துட்டு வருவோம். அப்படியே அவங்க டாக்டரையும் கலந்து பேசுவோம். எதாவது ஐடியா கிடைக்கும்."

"நான் வரலை" என்றாள் ராஜேஸ்வரி. "ஜவஹரை எனக்குத் துணையா விட்டுட்டு நீங்க ரெண்டு பேர் மட்டும் போயிட்டு வாங்க."

"என்னம்மா?" என்றான் லேசான எரிச்சலுடன் ரகு.

உண்மையில் அவளுக்கு பயமாக இருந்தது. உண்மையைச் சந்திக்க.

"அவளை வற்புறுத்தாதே" என்று அவள் சார்பில் பேசினார் சம்பத்.

மனம் லேசானது போல் தூங்குவதற்குக் கலைந்தனர் அனைவரும்.

## 10

அன்றைய தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்தாள் ராஜேஸ்வரி.

நான்காம் பக்கத்தில் கண்களைக் கட்டி இழுத்து நிறுத்தியது அந்தச் செய்தி.

"அழகர் கோவில் மலையில் இளம் வாலிபனின் பிணம்"

கண்கள் சட்டென்று குளம் கட்ட மேற்கொண்டு படிக்கவே முடியாமல் சிரமப்பட்டாள்.

பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த புகைப்படம் தெளிவின்றி இருந்தது.

நெஞ்சில் கைகளை வைத்துக் கொண்டு அயர்ந்தாள் ராஜேஸ்வரி.

கண்கள் கண்ணீரைக் கொட்டத் தொடங்கின.

இது நிச்சயமாக பாலன் இல்லை. இது வேறு யாரோ. அவள் தான் சொல்லி இருக்கிறாளே, பாலனுடைய உடலை என் கண்களில் பட விடுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறாளே!

அவன் வேறெங்கோ இருக்கிறான்.

இருக்கிறானோ, அல்லது... நினைக்கவே திகீலென்றது மனது.

அவன் உயிரோடு இருக்கிறான் என்றால் இத்தனை நாட்கள் என்னைத் தொடர்பு கொள்ளாமல் இருப்பானா? பதினேழு வயதுப் பையனை அந்த மாதிரி எங்காவது அடைத்து வைத்தல் சாத்தியமா? ஆவி உலகத்தில் இருக்கும் சிந்து அந்த மாதிரி மனித ஜீவனை அடைத்து வைப்பதுதான் சாத்தியமா?

அவள் இறக்கவில்லை என்று இங்குள்ளோர் அடித்துச் சொல்கிறார்களே! நேற்று கூட டாக்டர் ஊசி போட்டாராம். முனகினாளாம். நினைவு தப்பித் தப்பி வருகிறதாம். இவரும் ரகுவும் போய்ப் பார்த்து வந்தார்களே! பூமிநாதன் தொலைபேசியில் தெரிவித்தானே! நடுநடுவே இவரும் போய்ப் பார்த்து வருகிறார். அப்படியே அவள் இறந்து போயிருந்தால் இவ்வளவு நாளில் உடம்பு நாற்றமடித்து அழுகத் தொடங்கியிருக்காதா?

ஐயோ! அவள் உயிருடன் இருக்கிறாள் என்றால், ஆவியாக வந்து என்னை மிரட்டுவதும் என் பிள்ளையைக் காணாமல் அடித்ததும் யார்?

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த மகன் உயிரோடு இருக்கிறானா, இல்லையா என்று கூடத் தெரியாமல் தவிப்பதென்பது ஒரு தாய்க்கு எவ்வளவு பெரிய கொடுமை!

தோளில் ஆதரவாக விழுந்தது சம்பத்தின் கை.

"தைரியமா இரு ராஜி! எக்கச்சக்கமா மாட்டிட்டு இருக்கோம். சிக்கலை மெதுவா விடுவிக்கணும். அதே யோசனையாத்தான் இருக்கேன். சாகாத ஒரு பொண்ணு ஆவியா வர்றதுன்னா எப்படின்னு எனக்கும் புரியலை. இன்னும் இரண்டு மூணு நாளுக்குள்ளே இதுக்கு ஒரு வழி பண்ணலாம்" என்று அவளைத் தேற்றினார் சம்பத்.

"ஏங்க, யாராவது தெரிஞ்சவங்க மூலமா ஒரு மாந்திரீகரைப் போய்க் கேட்கலாமா?"

"அதுலதான் ராஜி நம்ம சிக்கலே! தெரிஞ்சவங்க யார் கிட்டயும் நடந்தவைகளை நாம் சொல்ல முடியாது. அதனால தெரியாத யார் மூலமாவது

தான் முயற்சி பண்ணியாகணும்"

"அதுக்காகவே ஏற்பாடு பண்ணுங்க."

"மாந்திரீக வழிக்கெல்லாம் போய்த்தான் ஆகணுமா ராஜி?"

"வேற வழி? அந்த ஆவி என்னைத்தானுங்க படுத்துது? உங்களுக்கென்ன ஜாலியாத் தூங்கிடறீங்க. ஒவ்வொரு நாளும் ராத்திரி வந்தாலே என் இதய அழுத்தம் எவ்வளவு கூடிடுது தெரியுமா? நீங்களா இதுக்கு ஏதாவது பண்ணலின்னா நானே யாரையாவது விசாரிச்சு பார்த்துக்கறேன்" என்றாள் ஆவேசமாக.

மறுநாள் மாலை ஐந்து மணிக்கு மேல் ராஜேஸ்வரியை மட்டும் அழைத்துக் கொண்டு நகரின் ஒதுக்குப்புறமாகக் காய்ந்துகிடக்கும் நதிக்கரை ஓரமாக அமைந்த பத்ரகாளி அம்மன் கோவிலுக்குச் சென்றார் சம்பத்.

"இங்கே எதுக்குங்க?"

"இந்தப் பூசாரியிடம் நம்ம வீட்டுப் பிரச்னையைப் பற்றி கோடி காண்பிச்சு வச்சிருக்கேன். சிந்துவைப் பற்றி சொல்லலை. ஏதோ ஒரு ஆவி வந்து இந்த மாதிரி பயமுறுத்துதுன்னு மட்டும் சொன்னேன். அவர் ஒரு பேயோட்டி கிட்டக் கூட்டிப் போறேன்னு சொன்னார். இன்னிக்கு அந்த ஆளைப் போய்ப் பார்ப்போம். இந்தப் பிரச்னைக்கு என்ன தான் தீர்வு சொல்றாருன்னு தெரியும்"

கோவிலில் பூசாரி பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொண்டார்.

"அர்ச்சனை ஒண்ணு பண்ணிடலாமா?"

அர்ச்சனை செய்து வழிபட்டனர்.

நாக்கினை நீட்டியபடி இருந்தாலும், பத்ரகாளி அருள் ரூபத்தில்தான் இருந்தாள். ராஜேஸ்வரிக்கு கோவிலைச் சுற்றி வந்ததில் ஒரு மன ஆறுதல் ஏற்பட்டது நிஜம்.

தன் பணிகளை முடித்துக் கொண்டு மஞ்சள் பையுடன் புறப்பட்டார் பூசாரி.

"கன்னியப்பன் வீடு இதே கரையோரமா கொஞ்சதூரத்தில் தான் இருக்கிறது. நடந்தே போயிடலாம்" என்று நடக்கத் தொடங்கியவரைப் பின் தொடர்ந்தனர் இருவரும்.

"என்னதான் அறிவியல் கம்ப்யூட்டர்னு பேசிக்கிட்டாலும், இந்த பில்லி சூனியம் ஏவல் வினைகளும் நடந்தபடிதான் இருக்கு உலகத்திலே" என்று சிரித்தார் பூசாரி.

"என்னங்க பண்றது. இரண்டு பக்கமும் உண்மையைக் கண்டவர் யாருமில்லை. யாரோ சொன்னதை நம்பியபடிதான் வாழ்க்கை ஓடிட்டிருக்கு. நம்மைப் பாதிக்காத வரைக்கும் பேயாவது பூதமாவதுன்னு சொல்லிக்க வேண்டியதுதான். பாதிச்சா அப்புறம் இருக்கவே இருக்கு இந்த மாதிரியான வழிகளும்"

ராஜேஸ்வரிக்கு அவர்களுடைய உரையாடல் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வேறு வழியில்லாமல் சகித்துக் கொண்டு உடன் நடந்தாள்.

மேடு தாண்டி இறங்கியதும் நிறைய வீடுகள் கண்களில் பட்டன.

“அதோ, பச்சைப் பெயிண்ட் அடிச்சிருக்கே. அதுதான் கன்னியப்பன் வீடு”

பயபக்தியுடன் வெளியே செருப்புகளைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தார்கள் மூவரும்.

கன்னியப்பன் அப்போதுதான் குளித்து புதிதாக விபூதிப் பட்டைகளை அணிந்திருந்தார் போலும்.

திறந்த மார்பில் தவழும் சங்கிலியில் மண்டை ஓட்டு மாடலில் டாலர் தொங்கியது.

வெளியே விழுந்து விடுமோ என்று பயமுறுத்தும் விதமான கண்களின் செவ்வரிகளில் தீவிரம் இருந்தது.

“சொல்லுங்க, என்ன பிரச்னை?” என்று கேட்ட குரல் கணீரென்றிருந்தது.

“இவள் என் மனைவி. ஏதோ ஒரு கெட்ட ஆவி கொஞ்ச நாளா இரவுகளில் வந்து இவளை பயப்படுத்திகிட்டிருக்கு. அந்த சமயங்களில் இவள் என்னை எழுப்ப முயற்சி பண்ணினாலும் நான் ஏதோ மயக்கத்தில் கட்டுண்ட மாதிரிக் கிடந்து விடுகிறேன். ஒண்ணுமே புரியலை” என்றார் சம்பத்.

அவர் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

“ஆவியா வர்றது உங்களுக்கு முன்னே பின்னே தெரிந்த ஆவியா? புதுசா?”

ராஜேஸ்வரி பதில் சொல்லத் தயங்கினாள்.

பூசாரி அந்த இடத்தை விட்டு வெளியே சென்று விட்டார்.

“இதோ பாருங்கம்மா. இங்கே நீங்க எவ்வளவு தூரம் உண்மை சொல்றீங்களோ அவ்வளவுக்கு பரிகாரம் சரியாப் பண்ண முடியும். இங்கே பேசற எதுவும் யாருக்கும் வெளி ஆளுக்குப் போய்விடாது. நீங்க ஏன் தயங்கறீங்க? எத்தனை பேர் அவங்க வீட்டு மருமகளைக் கொன்னு புதைச்சுப் போட்டு அவளுடைய ஆவி வந்து பயமுறுத்துதுன்னு என்கிட்ட தாயத்து வாங்கிப் போயிருக்காங்க தெரியுமா? அந்தக் கதையெல்லாம் வெளியே வந்தா இந்த ஊரில் மட்டும் என்னுடைய சாட்சியில் குறைஞ்சது நாப்பது குடும்பம் கம்பி எண்ணிட்டிருக்கும்” என்றார் கன்னியப்பன்.

சம்பத் திடுக்கிட்டார்.

“இல்லங்கையா, யாருன்னே தெரியாத புது ஆவிதான் அது”

அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் அவர்.

“சரி, வாங்க என் பூஜை அறைக்குப் போகலாம்” என்று உள்ளறைக்கு அழைத்துச் சென்றார்.

நிறைய சாமிபடங்களும் எலுமிச்சை மாலைகளும் சிறிய யாக குண்டமும்

சுற்றிலும் இருந்த சிவப்புத் திரவங்களும் சிறிய குட்டிச் சாத்தான் பொம்மைகளுமாக அந்த அறை அமானுஷ்யமான தோற்றத்துடன் இருந்தது. ராஜேஸ்வரிக்கு மூச்சடைத்தது போல் இருந்தது.

கன்னியப்பன் வலதுகை நிறைய விபூதியை அள்ளிக் கொண்டு நெஞ்சினருகில் கொண்டுபோய்க் கண்களை மூடிக் கொண்டு ஏதோ முணுமுணுத்து விட்டு யாக குண்டத்தினுள் எறிந்தார்.

அது பக்கென்று தீப்பற்றிக் கொண்டு எரிந்தது.

அவர்கள் இருவரையும் பார்த்துச் சிரித்தார்.

யாக குண்டத்தினுள் கைவிட்டு இரண்டு தாயத்துகளை எடுத்தார்.

"இதை நீங்கள் இருவரும் உங்கள் கைகளில் கட்டிக் கொள்ளுங்கள். எந்த ஒரு கெட்ட ஆவியும் உங்கள் வீட்டுப் பக்கமே அஞ்சி விலகி ஓடிவிடும்" என்றவராக கறுப்புக் கயிறுகளில் கோர்த்து ஒரு தாயத்தைப் பிரித்தெடுத்து சம்பத்தின் வலது கையில் கட்டிவிட்டார்.

"அவங்களுக்கு நீங்களே கட்டி விடுங்கள்" என்று பணிக்க, அடுத்ததை ராஜேஸ்வரிக்கு சம்பத் கட்டிவிட்டார்.

"இந்தத் தாயத்து உங்கள் கைகளில் இருக்கும் வரை ஒரு பிரச்னையும் இருக்காது"

"இந்த எவ்வளவு நாட்கள் கட்டி இருக்க வேண்டும்?"

"நியாயமாகப் பார்த்தால் அந்த ஆவியானது சாந்தி அடையும் வரை இந்தத் தாயத்து உங்களுடன்தான் இருக்க வேண்டும். நீங்க எதுக்கும் ஒரு மண்டலம்- நாற்பத்தெட்டு நாட்கள் கழித்து இங்கே வாருங்கள். பார்க்கலாம்"

"ஒருவேளை தாயத்துக்கு ஏதாவது பாதிப்பு என்றால்?" என்று கேட்டார் சம்பத்.

கன்னியப்பன் இரண்டு கைகளையும் உயரே தூக்கி வானத்தைக் காண்பித்தார்.

சம்பத் கூட்டி விழுங்கினார்.

அவருக்கு தட்சணை கொடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். பூசாரிக்கு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள்.

ஆட்டோவில் வரும்வழியில் "இனியாவது தைரியமா இரு ராஜி. எல்லாம் சரியாயிடும்" என்று தேறுதல் சொல்லியபடி வந்தார் சம்பத்.

ஆறுதலாக அவர் தோளில் சாய்ந்திருந்தாள் அவள்.

வீட்டு வாசலில் இறங்கி ஆட்டோக்காரனுக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டுப் படியேறிய போது கவனித்தாள் ராஜேஸ்வரி. அவள் கையில் இருந்த தாயத்து மாயமாகி இருந்ததை. அதை சம்பத்திடம் சொல்ல முயலும்போது தான் கவனித்தாள். அவருடைய கையில் இருந்ததையும் காணோம்.

முகமெல்லாம் வியர்த்துப் போனது அவளுக்கு.

ஏதோ துர்ச்சகுனம் என்று நினைத்தாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை ராஜி! இப்போ இராத்திரி ஆயிருச்சு. நாளை சாயங்காலம் திரும்பவும் அவரிடமே போய் வாங்கிக் கொள்ளலாம்" என்று அவளைத் தேற்றி உள்ளே அழைத்துச் சென்றார் சம்பத்.

அன்று இரவு பயத்தின் காரணமாகத் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள்.

திடீரென்று ஏதோ தீய்கின்ற வாடை.

படுக்கையில் இருந்து எழுந்தாள்.

பக்கத்தில் இருந்த சம்பத்தை ஒருமுறை எழுப்பிப் பார்த்தாள். அவர் எழவில்லை. தெரிந்துவிட்டது.

சிந்துவின் வேலை.

சுற்றிலும் பார்த்தாள். யாரும் இல்லை.

மெல்ல இறங்கினாள். அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.

அடுக்களையில் இருந்துதான் அந்த வாடை வந்து கொண்டிருந்தது.

அடடா! அடுப்பில் ஏதும் இருக்கிறதா?

அவசரமாக உள்ளே நுழைய, அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அதன்மேல் இருந்த பாத்திரத்தில் இருந்த பால் மொத்தமும் காய்ந்து தீய்ந்து புகை கிளப்பி நாற்றம் பரப்பிக் கொண்டிருந்தது.

விளக்கைப் போட்டு ஓடிச் சென்று அடுப்பை அணைத்தாள்.

பாத்திரம் கருகி இனி அவ்வளவுதான் என்பது போல் இருந்தது.

இடுக்கி பிடித்து எடுத்து அதனைக் கழுவும் இடத்தில் போட்டாள்.

சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்டவளாக மீண்டும் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கைக்கு வந்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் மீண்டும் ஒருவித வாடை.

இது விநோதமாக இருந்தது.

வேகமாக எழுந்து விளக்கைப் போட்டாள்.

இந்த அறையில் இல்லை. வெளியே வந்தாள். அடுக்களையில் இருந்துதான் வருவது போல் இருந்தது.

அங்கே நடந்து சென்று விளக்கைப் போட்டாள்.

வீல் என்று அலறினாள். அடுப்பு மேடை மீது ஒரு பூனை செத்துக் கிடந்தது.

அப்படியே பின்வாங்கி நடந்தாள். சற்றுமுன் இருந்த பால் தீய்ந்த வாடையைக் காணோம். அதைவிட அதிர்ச்சி கழுவுமிடத்தில் போடப்

பட்டிருந்த பாத்திரத்தையும் காணோம்.

அவளுடைய அலறல் சத்தம் கேட்டு யாரும் எழுந்து வராதது இன்னும் பயத்தைக் கொடுக்க, விளக்குகளை அணைக்கக்கூடத் தோன்றாதவளாக அப்படியே ஓடிச் சென்று படுக்கையில் குப்புற விழுந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

"இன்னொருமுறை ஏதாவது தாயத்து அது இது என்று எவன் கிட்டயாவது போன, இப்போ அடுப்பு மேடையில் பார்த்தியே அந்தப் பூனையின் இடத்தில் யார் இருப்பான்னு நான் சொல்ல விரும்பலை. இதுதான் உனக்கு கடைசி எச்சரிக்கை. புரியுதா?" என்று ஒலித்தது சிந்துவின் குரல்.

மூச்சுவிட மறந்து இறுகினாள் ராஜேஸ்வரி.

## 11

"உங்கம்மாவைப் பற்றி நீங்க சொல்ற சித்திரத்தை வைத்துப் பார்த்தா நாம் இல்லாத ஊருக்குப் போகாத வழியைத் தேடிட்டிருக்கோமோன்னு தோணுது ரகு" என்ற தேவிகாவையே உற்றுப் பார்த்தான். நெற்றியில் விழுந்திருந்த அவளுடைய சுருள் கேசங்களின் இழைகள் காற்றில் பறந்து கொண்டிருக்க அவளுடைய முகத்தில் லேசான கவலையின் சாயல்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு வரை நிரந்தரமாக இருண்டிருந்த அந்த முகத்தில் இப்போது தான் சோபையின் பொலிவு வரத் தொடங்கியிருந்தது. ரகு தான் அவளுடன் வலிய பேசிப் பேசி அவள் தன் கவலைகளை மறக்க வைத்து நம்பிக்கையை ஊட்டி இன்று அவனுடன் ரெஸ்ட்டாரெண்டுக்கு வந்து காஃபி சாப்பிடும் அளவுக்கு கொண்டு வந்திருந்தான்.

அந்த முகத்தில் மீண்டும் கவலை படிவதை விரும்பாதவனாக, "தேவிகா! நான் நன்கு யோசிக்காமல் எந்தக் காரியத்திலும் இறங்குவதில்லை. நீ கவலைப்படும் வண்ணம் ஏதும் ஆகாது" என்று தேற்றினான்.

அவள் அமைதியாக காஃபியை உறிஞ்சினாள்.

"எதிர்பாராதவிதமாக எங்கள் வீட்டில் ஓர் அசம்பாவிதம். அதன் தொடர்ச்சியாகக் குழப்பமான சூழல்கள். உன்னை அழைத்துப் போய் அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நான் காட்டும் தயக்கம் அதனால்தான். இப்போதைக்கு எல்லாமே கொஞ்சம் குழப்ப நிலையில் இருக்கின்றன. சீக்கிரம் தெளிந்துவிடும். அதன்பிறகு ஒரேநாள் வேலை உன்னை எங்க வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைக்கறதும், அதைத் தொடர்ந்து நம் கல்யாண ஏற்பாடுகளும்."

"அது இரண்டுக்கும் நடுவில் ஒன்றும் நிகழப் போவதில்லை என்றா

நம்புகிறீர்கள்?"

"எது இரண்டுக்கும் நடுவில்?."

"என்னை உங்க வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைப்பதற்கும், ஏதோ சொன்னீங்களே கல்யாணம் என்று; அதற்கும் நடுவில்."

"ம்.. என்ன நிகழும்?"

"பிரளயம்" என்றவளாகத் தன் கோப்பையை உயரத் தூக்கிக் குடித்துக் கீழே வைத்தவள், "சரி, நேரமாகுது. போகலாமா ரகு?" என்று எழுந்தாள்.

அவள் சொன்ன வார்த்தையால் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்த ரகு கலைந்தவனாக எழுந்தான்.

வெளியே வந்து அவளுக்கு டாட்டா காட்ட, அவள் ஒரு திசையில் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு மறுபக்கமாகத் தன் திசைக்குத் திரும்பிய ரகுவுக்கு ஒரு கணம் மூச்சே நின்றது.

"ஹலோ பிரதர்" என்றவனாக நின்று கொண்டிருந்தான் ஜவஹர்.

என்ன சொல்வதென்றே வார்த்தைகளுக்குத் தடுமாறியவனை, "அண்ணா! யாரவங்க? அண்ணி நம்பர் டூவா?" என்று சீண்டினான்.

"ஜவஹர்! நல்லதாப் போச்சு நீ எங்களைப் பார்த்தது. எப்படியும் இது குறித்து நானே உன்னுடன் பேசணும்னு இருந்தேன். திரும்பவும் உள்ளே போகலாமா? ஏதாவது சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே"

உள்ளே சென்றார்கள்.

"அந்தப் பொண்ணு பேரு தேவிகா"

"பழைய காலத்துப் பேரா இருக்குண்ணா. ஜோதிகான்னு மாத்திக்கச் சொல்லு"

"ஒழுங்கா சீரியஸாக் கேட்கப் போறியா இல்லையா?"

"சாரி, சாரி" என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

"என் கூடத்தான் ஆஃபீஸில் வேலை பார்க்கறா. உள்ளூர்தான். கௌரவமான குடும்பம். நம்ம ஆளுங்கதான்"

"வெல். அப்புறம் என்ன? அப்பாவைப் பொறுத்தவரை வேற ஜாதின்னா கூடப் பிரச்னை இல்லை. நம்ம ஆளுங்கதான்னு சொல்ற. அம்மா சைடும் ஓகே. வேலை பார்க்கறதுனால கொஞ்சமாவது சேர்த்து வச்சிருப்பாங்க. அம்மாவோட ஆசைக்கு நகையோ, பணமோ பிரச்னை இருக்காது. அப்புறம் ஏண்ணா முழுங்கி முழுங்கிப் பேசற? இதுல நான் ஹீரோயிக்கா உன் துணையா செய்யறதுக்கு என்னதான் இருக்கு? அட, போண்ணா, விஷயத்தையே சப்புன்னு ஆக்கிட்ட" என்றபடி வெளியே பார்க்கத் தொடங்கினான் ஜவஹர்.

"அந்தப் பொண்ணு ஒரு விதவை"

பொட்டில் அடிபட்டது போல் திரும்பினான்.

“இதைக் கேட்டப்புறமும் அம்மா தடை ஏதும் சொல்லாமல் ஆசீர்வதிப்பாள்னா சொல்ற?”

ரகுவின் முகம் இறுகி இருந்தது. ஜவஹர் யோசனையில் ஆழ்ந்தான்.

“கல்யாணம் ஆகி ஆறே மாதங்களுக்குள் கணவனை ஒரு விபத்தில் பறி கொடுத்த துரதிர்ஷ்டசாலி அவள். அந்த விபத்து நடந்து இரண்டு வருஷங்கள் ஆச்சு. இப்போதான் மனம் தேறி ஓரளவுக்கு நல்லா இருக்கா.”

“அண்ணா! யூ ஆர் கிரேட்” என்று தன் அண்ணனைக் கைகுலக்கிப் பாராட்டினான் ஜவஹர். “கவலைப்படாதேண்ணா! இந்தக் கல்யாணத்தை நடத்தி வைப்பது என் பொறுப்பு. அப்பாவும் பூமிநாதன் அண்ணாவும் கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவாங்க. அம்மாவை நினைச்சுக் கவலைப்படாதே. அவளை நாங்க சமாளிச்சுக்கறோம்.”

“சிந்து அண்ணிக்கு நடந்த அநீதிக்கு அந்தப் பாவத்திலிருந்து நம்ம குடும்பம் மீளணும்னா இப்படி ஒரு நல்ல காரியமாவது பண்ணனும். ஆனா அம்மாவை நினைச்சா நிஜமாகவே கொஞ்சம் பயம்மாத்தான் இருக்கு”

“ஒண்ணு செய்யிண்ணா, திடீர்னு அம்மா முன்னால இவங்களைப் பத்திப் பேசறதை விட, நீயே இவங்களை ஒருநாள் சாயங்காலம் வீட்டுக்கு அழைத்து வா. அம்மாவுக்கு, சும்மா உடன் வேலை பார்க்கறவங்க என்கிற அளவுக்கு மட்டும் அறிமுகப்படுத்திட்டு அம்மாவுடன் அவங்களைக் கலந்து பழகச் சொல்லு. அம்மா முன்னால அவங்ககிட்ட நல்லா வழிஞ்சு வழிஞ்சு பேசு. அதுக்கு உனக்கு சொல்லித்தர வேண்டியதில்லை. அம்மா முறைச்சாலோ கண்டுக்கவே கண்டுக்காதே. எப்படியும் அவங்க முன்னால அம்மா ஏதும் கேட்க மாட்டா. அவங்க போனப்புறம் கேட்டா லேசா கோடி காட்டிப் பேசு.”

“ம். அப்பறும்?”

“அந்த விஷயத்தை அத்தோட விட்டுரு. நாலஞ்சு நாள் கழிச்சு நீ கூட்டிட்டு வராமல் அவங்களை நம்ம வீட்டுக்கு உன்னைத் தேடி வர்ற மாதிரி ஒரு சீன் உருவாக்குவோம்.”

“பயங்கரமா திட்டம் போடற?”

“இப்படியே நாலஞ்சு அட்டெம்ப்ட்டுல அம்மா, தானா உள்ளூர இளகிடுவா. அதுக்கப்புறம் ஒருநாள் எல்லோருமா சேர்ந்து அவளை அமுக்கிடலாம்”

ஜவஹரின் கைகளைப் பிடித்துக் கொண்டு “ரொம்ப நன்றிடா” என்ற ரகுவின் கண்கள் பனித்திருந்தன.

“விடுண்ணா, நான் இன்னும் நாலு நாளில் ப்ராஜக்ட் விஷயமா காரைக்கால் போறேன். அங்கே ரெண்டு நாள் வேலை. நான் திரும்பி வந்தப்புறம் எல்லாம் பார்த்துக்கலாம்” என்று எழுந்தான் ஜவஹர்.

“காரைக்காலா? எதுக்கு?”

“பிரதர்! நான் படிப்பின் கடைசி வருடத்தில் இருக்கறேன்ங்கறது மறந்து போச்சா? ப்ராஜக்ட் ஓர்க் ஒண்ணு பண்ணியாகணும். அதுக்காக என் நண்பன் விக்டரிடம் சொல்லியிருந்தேன். அங்கே எண்ணெய் எரிவாயுக் கழகத்தோட தொடர்பு உள்ள ப்ராஜக்ட்டா செஞ்சா பின்னால மதிப்பு இருக்கும். அவன், அதுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கறதாச் சொல்லி இருந்தான். அது சம்பந்தமாத் தான் ஒரு நடை போயிட்டு வரவேண்டி இருக்கு.”

## 12

“அம்மா! இதுதான் தேவிகா. எங்க அலுவலகத்தில் வேலை செய்யறாங்க” என்று அறிமுகம் செய்யப்பட்ட பெண்ணை ஏறிட்டு நோக்கினாள் ராஜேஸ்வரி.

நிச்சயம் சாதாரண குடும்பப் பெண்தான் என்று தெரிந்தது.

எளிமையாக இருந்தாள். நல்ல கலர். அதனால் முகத்துக்கு பவுடர் ஏதும் பூசாமலேயே களையாக இருந்தாள். நெற்றியில் சின்னதாக ஒரு பொட்டு. காதுகளில் அழுத்தமாக சின்னத் தோடுகள். கழுத்தில் மெலிதாக ஒரு செயின்.

மங்களகரமாக இருந்தாள்.

“உட்காரும்மா, ஏன் நிக்கற? எங்கம்மா இருக்கு உங்க வீடு?” என்று விசாரித்தாள் ராஜேஸ்வரி.

“சக்தியம்மன் கோவில் தெருவில்” என்று பளிச்சென்று சொன்னான் ரகு.

அவனை ரகசியமாக முறைத்தாள் ராஜேஸ்வரி. அவளுக்கு இன்னும் புரியவில்லை. அவன் எதற்காக அந்தப் பெண்ணை இங்கே கூட்டி வந்திருக்கிறான் என்று.

“அம்மா! நம்ம வீட்டுக்கு முதன் முறையா வந்திருக்காங்க. காஃபி ஏதாவது குடும்மா. சும்மா பேச வச்சே அனுப்பிட்டாங்க ரகு வீட்டிலன்னு நாளை ஆஃபீஸ்ல இவங்க போய் சொன்னா என் கெளரவம் என்னாகிறது?”

‘அடடா! அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா. உங்களைப் பற்றி இவர் ஆஃபீஸில் ரொம்பவும் சொல்லி இருக்கார். ஒருநாள் பார்க்கணும்ன்னு சொல்லிட்டு இருந்தேன். இன்னிக்கு வற்புறுத்திக் கூட்டிட்டு வந்தார்” என்று அவசரமாகப் பேசிய போது கூட தேவிகாவின் குரல் மென்மையாக இருந்தது. ஒவ்வொரு வார்த்தையையும் உச்சரிக்கும் விதத்தில் தெளிவும் தீர்க்கவும் இருந்தது.

“உள்ளே அடுக்களைக்கு வாம்மா” என்று அவளை அழைத்துச் சென்றாள் ராஜேஸ்வரி.

ரகு பரபரப்பாக இருந்தான். வீட்டில் வேறு யாரும் இல்லை. ஜவஹராவது

வந்து சேர்ந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டாள். அம்மாவும், தேவிகாவும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அறிவதற்காக அடுக்களைப் பக்கம் போக முடியவில்லை.

ஹாலில் சோஃபாவில் உட்கார்ந்து தொலைக்காட்சியின் அலைவரிசைகளை மாற்றி மாற்றி மனம் லயிக்காமல் அலைபாய்ந்து கொண்டிருந்தான்.

"நல்லா பேசறியேம்மா. அடிக்கடி வந்து போய் இரு. அம்மாவையும் ஒரு நாள் கூட்டிட்டு வா" என்கிற ராஜேஸ்வரியின் குரல் கேட்க ஆரம்பித்தது.

அம்மா, ஒரு தட்டில் காஃபிக் கோப்பைகளுடன் முன்னே வர பின்னேயே தேவிகா ஒரு தட்டில் ஏதோ புதிய பலகாரம் எடுத்தபடி வந்து, இருவரும் ரகுவுக்கு எதிரே அமர்ந்தார்கள்.

"அட, இன்னிக்கு தேவிகா புண்ணியத்தில் வெறும் காஃபியா இல்லாமல் ஏதோ டிஃபனும் சேர்ந்து கிடைக்குது. மேடம், இப்போ புரியுதா நான் ஏன் இன்னிக்கு உங்களைக் கட்டாயப் படுத்தி இங்கே அழைத்து வந்தேன்னு"

இவனுக்கு இன்று என்ன ஆனது? ஏன் இந்த வழிசல் வழிகிறான்... என்று உள்ளூர எண்ணம் ஓடினாலும், வெளிக்காட்டிக் கொள்ளவில்லை ராஜேஸ்வரி.

அப்போதைக்கு மட்டுமல்ல, எல்லாம் முடிந்தப்புறமும் கொஞ்ச நேரம் பேசியிருந்து விட்டு தேவிகா சென்ற பிறகும் கூட அவள் குறித்து ஏதுமே பேசவில்லை அவள்.

ரகு தவியாய்த் தவித்தான். எப்படியாவது பேச்சைச் சுற்றி வளைத்து தேவிகா பக்கமாகக் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தான்.

அவள் அசைந்து கொடுக்கவே இல்லை.

"அம்மா! அவளைப் பற்றி என்ன நினைக்கிற?" என்று வெளிப்படையாகவே கேட்டுவிட்டான்.

"என்ன நினைக்கணும்?"

"அவள் அடுக்களையில் தன்னைப் பற்றி எதுவுமே சொல்லலையா?"

"சொன்னா, அவங்க வீடு, அம்மா, அப்பா, தம்பி, எல்லார் பற்றியும் சொன்னா"

"அவள் புருஷன் பத்தி?"

"சொல்லலியே, அவள் கல்யாணம் ஆனவளா?" என்ற ராஜேஸ்வரியின் குரலில் லேசனா ஏமாற்றம் தெரிந்தது. அது ரகுவுக்கு சந்தோஷமாக இருந்தது. நிச்சயமாக அம்மா அவளைக் குறித்து ஏதோ ஒரு கணக்கு மனதுக்குள் போட்டிருக்காவிட்டால், இந்தச் செய்தி அவளை ஏன் ஏமாற்றுக்குள்ளாக்க வேண்டும்?

"பாவம் அவளுக்குப் புருஷன் கிடையாது?"

"என்னாச்சு? விதவையா? வாழாவெட்டியா?"

ரகுவுக்கு எரிச்சல் வந்தது. "கூர்மையான வார்த்தையாக் கொட்டாதம்மா. ஷீ இஸ் எ விடோ"

"அதைத்தாண்டா நான் தமிழில் கேட்டேன். ஆமா, அவள் என்னடா விதவை மாதிரியா இருக்கா? பூ என்ன பொட்டு என்னன்னு ஒரு அலங்காரத்துலயும் குறைச்சல் இல்லாமல்... ஒரு நல்ல பொம்பளை இந்த மாதிரி ஆள்மயக்கி அலங்காரங்களையெல்லாம் செய்யலாமா?"

"அம்மா!" என்று சீறினான் ஜவஹர். "அவசரப்பட்டுப் பெரிய வார்த்தை எல்லாம் சொல்லாத. அவளுடைய புருஷன் இறந்துட்டான். அதுக்காக அவள் எதுக்காகப் பூவையும், பொட்டையும் இழந்துட்டு அலங்கோலமாக இருக்கணும்?"

"பூவும் பொட்டும்தானடா சுமங்கலிக்கான அடையாளமே"

"அங்கேதாம்மா நீ தப்பு பண்ற. ஒரு பொண்ணுக்கு முதன் முதலா பூ அவங்கம்மாவோ, அப்பாவோ வாங்கித் தர்றாங்க. பொட்டு அவங்கம்மா வச்சு விடறா. கலர் புடவை அவ தாய்மாமன் வாங்கித் தர்றான். நகைகள் அலங்கார சாமான்கள், சகோதரன் வாங்கித் தர்றான். வேற யாரும் தராத ஒண்ணு, அவள் வாழ்நாளில் முதல் தடவையா புருஷன் தர்றது தாலி ஒண்ணுதான். அதனால, புருஷன் இறந்திட்டா, இந்த நாட்டுப் பொண்ணுகள் அந்தத் தாலியை மட்டும் கழட்டினாப் போதுமானது. வேறு எதையும் கழட்ட வேண்டிய அழிக்க வேண்டிய அவசியமே இல்லை. தேவிகா தன் தாலியைக் கழற்றிட்டா. அவள் உண்டு தன் வேலை உண்டுன்னு யாருக்கும் எந்தத் தொந்தரவும் தராமல், தன் காலில் நிற்கறதுக்குத் தயாரா எங்க அலுவலகத்தில் வேலை பார்க்கறா. நானாகத்தான் அவளிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேனே ஒழிய, அவள் ஒண்ணும் ஆள் மயக்கி இல்லை. நீ நினைப்பதுபோல..."

"ஓஹோ" என்றாள் ராஜேஸ்வரி.

அவள் குரல் அலட்சியமாக இருந்ததாகப் பட, வெடித்தான் ரகு.

"ஏம்மா இப்படி இருக்கற? ஒரு சின்ன விஷயம் நினைச்சுப் பாரும்மா. இந்த வீட்டில் இவ்வளவு பெரிய துக்க காரியம் நடந்தாலும், நம்ம சொந்தம்னு சொல்லி யாராவது விசாரிக்கவாவது வரும்படியா நாம் வாழ்ந்திருக்கோமா? சிந்து அண்ணி இங்கிருந்து போய் எவ்ளோ நாளாச்சு, பூமி அண்ணா கிளம்பிப் போய் எவ்ளோ நாளாச்சு, சிந்து அண்ணிக்கு இவ்ளோ பெரிய விபத்து நிகழ்ந்திருக்கு, பாலன் காணாமல் போய் எவ்ளோ காலம் ஆச்சு, இதெல்லாம் நம் உறவில் யாருக்காவது தெரியுமா? தெரியா[illegible] வலையையும் துக்கத்தையும் தோள் சாஞ்சு பகிர்ந்துக்கற அளவுக்கு [illegible]ரயாவது பழகி வச்சிருக்கோமா? கிடையாது. நமக்கு நாமே போட்டுக்கிட்ட அந்தஸ்து வேலியும், ஆணவ வேலியும் யாரையும் நம்மை அண்ட விடாமல் பண்ணிடுச்சு. இப்படிப்பட்ட லட்சணத்தில்தான் நாம் வாழ்ந்திருக்கோம். கொஞ்சமாவது முற்போக்கா யோசிக்கற பழக்கத்தை நாம் எப்போ மேற்கொள்ளுவோமோ

அப்பத்தான் இந்தக் குடும்பம் உருப்பட வாய்ப்பிருக்கு."

ராஜேஸ்வரி அடிபட்டது போல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான் என்னடா சொல்லிட்டேன்? ஒரு விதவையைப் பார்த்தால் என் வயசுப் பொம்பளைங்களுக்கு மனசில் என்ன தோணுமோ, அதைத்தானே சொன்னேன். அதுக்கு இவ்வளவு பாட்டு அவசியம் தானா?" என்றாள். கூடவே, "இப்போது நான் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டிய காலம். இப்படித்தான் ஆகும். நீயா பேசற? அந்த ஆவி பேச வைக்குது" என்றாள் உடைந்துபோன குரலில்.

அம்மாவிடமிருந்து பெரிய அளவில் எதிர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து பயந்த அளவுக்கு, அவள் நடந்து கொள்ளாதது, தந்த ஆச்சர்யத்தையும் மீறி, ரகுவுக்கு, தான் கொஞ்சம் ஆவேசமாகப் பேசிவிட்டதாகத் தோன்றியது.

"என்னம்மா இப்படில்லாம் பேசற? உன்னை மரியாதைக் குறைவா நான் பேசலைம்மா. தப்பாப் பேசியிருந்தா மன்னிச்சுக்கோ."

ராஜேஸ்வரி எங்கோ வெறித்தபடி இருந்தாள். அவள் தேவிகா குறித்து முடிவாக ஏதும் சொல்லாதது ரகுவை உறுத்தாமல் இல்லை. ஆனாலும், இது சரியான தருணம் அல்ல என்று உணர்ந்தவன் போல் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

## 13

**கா**ரைக்காலின் கடற்கரை சாலை கடலுக்கு செங்குத்தாக நீண்டு, அழகாக சுத்தமாக இருந்தது.

"நேராக ஒன்றரை கிலோமீட்டர் போனா, கடல்" என்றான் விக்டர்.

சாலையுடனேயேகூட அரசலாறு வருகிறதா அல்லது அரசலாற்றை வழிகாட்டியாகக் கொண்டு சாலை கடற்கரைக்குப் போகிறதா என்பதுபோல், அடுத்தடுத்து அமைந்த சாலையும் ஆறும்.

"தமிழில் ஆறு அப்படீன்னா வழின்னு ஒரு அர்த்தம் உண்டுடா. உங்க ஊர் அரசலாறு அதை நிரூபிக்குது" என்றான் ஜவஹர்.

"என்ன மாப்ள? காரைக்காலுக்குள் வந்தவுடனே தண்ணி போடாமலேயே தமிழ் அள்ளிக்கிட்டு வருது உனக்கு?" என்று கேலி செய்தான் நண்பன் விக்டர்.

"சும்மாதானா? காரைக்கால் அம்மையார் வாழ்ந்த பூமி இல்லையா? நான் இங்கே இப்போதான் முதன்முறையா வர்றேன். அழகா அடக்கமா அம்சமா இருக்குடா இந்த ஊர். இப்படி இருக்கும்னு தெரிஞ்சிருந்தா, இத்தனை வருஷமும் ஒவ்வொரு லீவுக்கும் இங்கேயே வந்து உங்க வீட்லயே கூடாரம் அடிச்சிருப்பேன்"

என்றான் ஜவஹர், மனசார.

“நோ ப்ராப்ளம்டா, இப்போ எப்படியும் ப்ராஜக்ட் வேலைக்காக நீ அடிக்கடி வந்து போய் இருக்க வேணும். அதில உன் ஆசை தீர காரைக்காலைச் சுற்றிச் சுற்றி வா. சரிதானா?”

“உங்க ஊரில் ஒண்ணே ஒண்ணுதான் பிடிக்கவில்லை. தமிழ்மணம் கமழ வேண்டிய ஊரின் தெருக்களில், ஏகப்பட்ட மதுபானக் கடைகள்” என்று அலுத்துக் கொண்டான் ஜவஹர்.

“தமிழ்நாட்டில் மதுவிலக்கு இருந்த காலங்களில், இந்த ஊருக்கு ஒரு தனி மரியாதையையும், முக்கியத்துவத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது, நீ சொன்ன காரைக்காலம்மையாரோட அற்புதத் திருவந்தாதி அல்ல. இந்த அற்புதத் தீர்த்தம்தான் புரியுதா?” என்று சிரித்தான் விக்டர்.

அரசலாற்றைத் தவழ்ந்து வந்த காற்று, ஈரக் கைக்குட்டையாக மேனியைத் துடைத்துவிட்ட சுகானுபவத்தில் திளைத்தவனாக, ஜவஹர் மெய் மறந்திருக்க, விக்டர் ஓட்டி வந்த கார், கடற்கரைச் சாலையின் மறு முனைக்கு வந்து, மணல் வெளியைத் தொட்டு நின்றது.

காரை விட்டு இறங்கியவனை ஆர்வமாகத் தழுவிய கடற்காற்று, அவன் ஆடைகளையும், தலை மயிரையும் ஆர்வமாகக் கலைத்துக் கொண்டிருந்தது.

கலங்கரை விளக்கம், சிறு பூங்கா, கலை நிகழ்ச்சிகளுக்கான சிறிய மேடை, சாலையின் இருபுறமும் அகலமான தடுப்புச் சுவர், உள்ளே சற்றுத் தள்ளி “ஸீகல்ஸ்” என்ற பெயரில் மதுபான பார் மற்றும் ஓட்டல்.

“அருமையான இடம்டா”

“உள்ளே ஓட்டலுக்குள் வர்றியா? இந்த மாதிரி கடற்கரைக் காற்றை அனுபவித்தபடி வேர்க்கடலை மசாலாவைக் கொறித்தபடி பீர் அடிக்கிற சுகத்துக்கு ஈடு இணை கிடையாதுன்னு புரிஞ்சுக்குவ”

“ச்சீ.. போடா”

அங்கேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள் நண்பர்கள்.

“இப்படியே மணலில் இறங்கி நடக்கலாம்டா. இந்த ஆறு கடலில் கலக்கும் இடத்தைச் சரியாப் பார்க்கணும்.”

“இங்கே பார்க்க முடியாதுடா. ஏன்னா, கடலும் ஆறும் கிட்டத்தட்ட ஒரே மட்டம். இன்னும் சொல்லப் போனா, இந்த தண்ணியே கடலின் பின்பகுதித் தண்ணீர்தான். நீ ஆசைப்படற மாதிரி, நதி கடலில் கலக்குறதைப் பார்க்கணும்னா, பூம்புகார் போகணும். ரெண்டு நாள் இருப்பியா? அங்கேயும் போகலாம். அங்கே காவிரி நதி சின்ன ஓடையா பத்தடி அகலத்துக்கு ஓடிவந்து, கடலில் கலக்கிற இடத்தில், நாம் போய் நின்னே பார்க்கலாம்.”

ஜவஹரின் கண்கள் ஆர்வத்தில் விரிந்தன.

“ஆனா, இந்த அரசலாறு முடிவுப் பகுதி இருக்கே.. மகா பயங்கரமான

பகுதி. நிறையப் பேர் இங்கே குளிக்கிறேன்னு கடலுக்குள்ள போயிருக்காங்க. அநியாயம் என்னன்னா, இங்கே உள்ளே போறவங்க உடம்பு வேதாரண்யம் தாண்டி எங்கேயாவது கிடைச்சாத்தான் உண்டு."

நண்பர்கள் பேசிக் கொண்டே மணல் வெளியில் நடந்து, கடல் அலைகள் கரையை முத்தமிடும் இடம் வரை வந்துவிட்டார்கள். அங்கேயே முட்டுகளைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தான் ஜவஹர்.

திடீரென்று விக்டரின் செல்லிடத் தொலைபேசி ஒலி கொடுக்க, சற்றுத் தள்ளிப் போய் எடுத்துப் பேசியவன், ஜவஹரைப் பார்த்து, "டேய், ஒரு அவசர வேலை. போயிட்டு அரைமணி நேரத்தில் வந்திடலாம். கிளம்பு" என்றான்.

ஜவஹருக்கு எழுந்திருக்கவே மனமில்லை. "அரைமணி நேரம்தானே? நான் இங்கேயே இருக்கேனே" என்றான் சோம்பல் முறித்தவனாக.

மணியைப் பார்த்தான் விக்டர். மாலை ஆறேமுக்கால். இருட்டு கவ்விக் கொண்டு வந்தது.

"நல்லது, நீ இங்கேயே இருக்கியா? நான் வந்து உன்னை அழைச்சுக்கறேன்" என்று கிளம்பி விட்டான்.

சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தான் ஜவஹர். கடற்கரை மணல் வெளியில் கூட்டமே இல்லை. ஜனங்கள் எல்லோரும் சாலையின் முடிவுக்குள் இருந்த பூந்தொட்டி, நீரூற்று, உட்காரும் மேடைகள் ஆகிய இடங்களைத் தாண்டி, மணல் வெளிப்பக்கம் வருவதே மிகவும் அரிது என்று தோன்றியது.

வலது பக்கம் அரசலாறு மற்றும் கடலின் சங்கமப் பகுதிக்கு அருகில் சில மீனவச் சிறுவர்களும், இளைஞர்களும் கடலில் நீராடிக் கொண்டிருந்தனர். சிலர் கரையேறிக் கொண்டிருந்தனர்.

அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான் ஜவஹர்.

அந்த சங்கமப் பகுதி அவனை வா வா என்று அழைத்துக் கொண்டிருந்தது.

மெல்ல எழுந்தான். அப்படியே கடலை நோக்கி நடந்தான். கால்கள் நனைய முட்டு நனைய தொடை நனைய உள்ளே தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

இரவுத் தூக்கத்தில் இருந்த ராஜேஸ்வரியைச் செல்லமாக அழைத்தது சிந்துவின் குரல்.

விழித்துக் கொண்டாலும் கண்களைத் திறக்கும் தைரியம் ஏனோ வரவில்லை ராஜேஸ்வரிக்கு.

"உன்னுடைய தூக்கம் கலைந்துவிட்டது தெரியும். திரும்பி என்னைப் பார்."

ராஜேஸ்வரி அருகில் படுத்திருந்த கணவரை இறுக்கிக் கொண்டாள். "என்னங்க, என்னங்க" என்று குரலும் எழுப்பிப் பார்த்தாள். வழக்கம் போலவே அவர் அசையாமல் கிடந்தார்.

சிந்து சிரித்தாள். சிந்துவின் சிரிப்பொலி இன்னும் நாராசமாக இருந்தது.

என்ன ஆனாலும் சரி. இன்று விழித்து எழுந்து உட்கார்ந்து அவளுடன் பேசுவதில்லை என்பதில் பிடிவாதமாக இருந்தாள் ராஜேஸ்வரி.

"அடுத்தது ஜவஹர்; அடுத்தது ஜவஹர்" என்று மந்திரம் உச்சாடனம் செய்வதுபோல், அவளுடைய காதுகளுக்குள் முணுமுணுப்பாக விழுந்தது சிந்துவின் குரல்.

இன்னும் இறுக்கமாகக் கண்களை மூடிக்கொண்டு சம்பத்தை இறுக்கினாள் ராஜேஸ்வரி.

மீண்டும் மீண்டும் அதே இரட்டைச் சொற்கள். சிந்துவும் வேறு ஏதும் பேசவில்லை.

அந்த வார்த்தைகளின் அர்த்தம் திடீரென்று ராஜேஸ்வரியின் சிந்தனையைத் தாக்க, திடுக்கிட்டுக் கண்விழித்தாள்.

எதிரே யாரும் இல்லை. அறையினுள் ஏதோ தீய்ந்த வாடை மட்டும்.

குமட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு. கூடவே அழுகையும் வந்தது.

சம்பத்தை எழுப்பிச் சொல்லலாமா என்று யோசித்தாள். இப்போது எழுப்பினால், சட்டென்று எழுந்து விடுவார். ஆனால், சொல்லித்தான் என்ன பயன்? அதே பழைய ஆறுதல்கதைதான் திரும்பக் கூறுவார்.

சே!

தூக்கமில்லாமல் அப்படியே மீதி இரவு முழுதும் படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

அதிகாலையிலேயே தொலைபேசியில் அழைப்பு வந்துவிட்டது.

தொலைபேசி அழைக்க, 'இவ்வளவு காலை நேரத்தில் யார்?' என்று எண்ணியபடியே சென்று எடுத்தாள் ராஜேஸ்வரி.

"ஆண்ட்டி! நான் காரைக்காலில் இருந்து விக்டர் பேசறேன்"

"ம். சொல்லுப்பா"

"எல்லாரும் நல்லா இருக்கீங்கள்ல?"

"நல்லா இருக்கோம்ப்பா. ஜவஹர் என்ன பண்றான்? அவனைப் பேசச் சொல்லுப்பா."

"ஆண்ட்டி! என்ன சொல்றீங்க? ஜவஹர் அங்கே வரலியா?"

"அங்கேதானப்பா வந்திருக்கான்."

"ஆமா ஆண்ட்டி. நேத்திக்கு நாங்க பீச்சுக்குப் போயிருந்தோம். எனக்கு ஒரு அவசர வேலையா அவனை அங்கேயே விட்டுட்டு டவுனுக்குள் ஒரு மணி நேரம் போயிட்டு வந்தேன். திரும்பி வந்து பார்த்தா, அவனை பீச்சில் காணோம். சரி, எங்க வீட்டுக்குப் போயிட்டான் போலன்னு நினைச்சிட்டு வந்து பார்த்தேன். இங்கேயும் வரலியாம். ஒருவேளை அங்கேதான் வந்திட்டானோன்னு

பார்க்கத்தான் போன் பண்ணினேன். எங்கே போயிட்டான், யாரிடமும் சொல்லாமல்?"

"என்னப்பா பேசிட்டிருந்தீங்க? அங்கே வேற யாரையும் பார்க்கப் போயிருப்பானா?"

"இல்லை ஆண்ட்டி, நானே நல்லா தேடிட்டுத் திரும்பவும் உங்களைத் தொடர்பு கொள்றேன்" என்று பேச்சினைத் துண்டித்துக் கொண்டான் விக்டர்.

ராஜேஸ்வரிக்குத் தலை சுற்றியது.

'அடுத்தது ஜவஹர்', 'அடுத்தது ஜவஹர்'

சிந்துவின் குரல் காதுகளில் ரீங்காரமிட்டது.

"என்ன?" என்று விவரம் கேட்க, அங்கே வந்த சம்பத் மற்றும் ரகுவிடம் விக்டர், சொன்னவைகளை விளக்கினாள்.

ரகு தானாகவே விக்டரைத் தொடர்புகொண்டு பேச ஆரம்பித்தான்.

சம்பத் துவண்டு போயிருந்த ராஜேஸ்வரியைக் கைத்தாங்கலாக அவளுடைய அறைக்குக் கூட்டிச் சென்றார்.

"அவள் சொன்னாங்க. அதுபடியே ஆயிட்டு வருது.. அந்த கெட்ட ஆவி நம்ம குடும்பத்துல எல்லாரையும் பலி வாங்கிட்டுத்தான் விடும்னு நினைக்கிறேன். எனக்கு பயமா இருக்குங்க" என்ற ராஜேஸ்வரியின் குரலில் நடுக்கம் இருந்தது.

ரகு வந்தான்.

"அப்பா! நானும் காரைக்கால் கிளம்பிப் போயிட்டு வர்றேன். கடற்கரையில் அவனைத் தனியா விட்டுட்டுப் போனானாம் விக்டர். அவன் திரும்ப வந்து பார்த்தப்போ, இல்லையாம். ஜவஹரோட அடையாளங்களோட ஒரு பையன் கடலில் குளிப்பதற்காக இறங்கினதைப் பார்த்ததா அங்கே உள்ள மீனவர்கள் சொல்லி இருக்காங்க. விக்டர் பதறிப்போய் இருக்கான். அதோட காவிரி கடல்ல கலக்கறதைப் பார்க்கணும்னு ஜவஹர் சொல்லிட்டிருந்தானாம். ஒருவேளை பூம்புகார் போயிருக்கலாம்னும் அவன் அபிப்ராயப்படறான். ஆனால், இவன்கிட்டகூட சொல்லாமல் ஏன் போகணும்? எதுக்கும் நான் போயிட்டு வர்றேன்."

"சீக்கிரம்டா. நீ அங்கே இருந்து சொல்லப்போற பதிலை வச்சுத்தான் போலீஸுக்குப் பேசறதா இல்லையான்னு தீர்மானிக்கணும்."

"வேணாம்டா. நீ போக வேணாம். அந்த பூதகி உன்னையும் பலி வாங்கிடுவா" என்று அலறினாள் ராஜேஸ்வரி.

அவளைத் தட்டிக் கொடுத்துத் தேற்றினார் சம்பத்.

"வேணாங்க. அந்த விக்டரே இன்னும் நல்லாத் தேடிட்டு பதில் தரட்டும். ரகு! நீ என் கூடவே இருடா. என்னை விட்டு எங்கேயும் போயிடாதே. எனக்கு பயம்மா இருக்கு" என்று ரகுவின் கைகளைப் பிடித்துக் கொண்ட ராஜேஸ்வரியின் கைகள், நடுங்கத் தொடங்கி இருந்தன.

## 14

ரகு காரைக்கால் போய்விட்டு இரண்டு நாட்கள் தாடியுடனும் தூங்காத விழிகளுடனும் வெறுங்கையுடனும் திரும்பி வந்தான்.

"கடவுளே! கடவுளே!" என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் ராஜேஸ்வரி.

"அந்தப் பிசாசு, தான் சொன்னதையெல்லாம் வரிசையா நிரூபிச்சிட்டு வர்றாளே. எனக்கு பயம்மா இருக்குங்க. நான் உங்க எல்லோரையும் பலி கொடுத்திட்டு அநாதையா ஆயிடுவேனோன்னு பயம்மா இருக்கே. அவளுக்கு என்னத்தைச் செஞ்சு சமாதானப்படுத்தறதுன்னு தெரியலியே" என்று புலம்ப ஆரம்பித்தாள்.

அவளைத் தட்டிக் கொடுத்த சம்பத், கவலையை விழுங்கியவாறு ரகுவிடம் கேட்டார்.

"அங்கே தேடறதுக்கு ஏற்பாடு ஏதும் செஞ்சிருக்கியா?"

"போலீஸுக்குச் சொல்லி இருக்குப்பா. அவங்க தலையில் அடிச்சுக்கறாங்க. அந்த இடத்தில் இந்த மாதிரி வெளியூர்க்காரங்க நிறையப் பேர் கடலில் அடிச்சுட்டுப் போகப்பட்டிருக்காங்களாம். அங்கே தான் போர்டு போட்டிருக்கே, அப்படியும் ஏன் உங்க தம்பி அங்கே போனார்? தற்கொலை முயற்சியாங்கற கோணத்தில் கேட்க ஆரம்பிச்சுட்டாங்க. அப்புறம் விக்டரும் அவங்க அப்பாவும்தான் அவங்க செல்வாக்கில் பிரச்சினையைப் போலீஸ் பெரிசாக்கிடாமல் தேட ஏற்பாடு செஞ்சிருக்காங்க."

"விசாரணைக்கு இங்கே வந்தாலும் வருவாங்களா?"

"கூடியவரைக்கும் அந்த மாதிரி ஆகாமல், விக்டரோட அப்பா பார்த்துக்கறேன்னு சொல்லியிருக்கார்."

## 15

"ராஜி! ஒண்ணு சொன்னாக் கேட்பியா?"

"சொல்லுங்க"

"இரண்டு நாளைக்கு முன்னால நம்ம ஜோஸியர் பூமணியைப் பார்க்கப் போயிருந்தேன். அந்த ராகவனை வேலையில் இருந்து துரத்திட்டாராம். நிறைய பேருக்குத் தப்புத்தப்பா பலன்கள் சொல்லி நிறைய குடும்பங்கள்ல குழப்பம் பண்ணிட்டானாம். நம்ம பசங்களோட ஜாதகம், உன்னோடது என்னோடது

எல்லாத்தையும் காண்பிச்சு, இப்போ நம்ம வீட்டு நிலைமை எப்படி இருக்குதுன்னு சாதாரணமா கேட்கற மாதிரி கேட்டுட்டிருந்தேன். அவர் இப்போ நடந்திருக்குற எல்லாத்தையும் கிட்டத்தட்ட சரியா புட்டுப் புட்டு வச்சார்."

ராஜேஸ்வரி அவரை பிரமிப்புடன் பார்த்தாள்.

"உங்க வீட்டில் ஒரு துர்ச்சம்பவங்கள் வரிசையா நடக்கிற மாதிரியான கிரக அமைப்புகள் இருக்கே. எப்படி நிம்மதியா இருக்கீங்கன்னு கேட்டார். நான் ஆடிப் போயிட்டேன். ஒரு பெண்ணால நீங்க எல்லாரும் ஆட்டங்காணப் போறீங்கன்னு சொன்னார்."

ரகுவும், ராஜேஸ்வரியும் அசையாமல் உறைந்தார்கள்.

"அதுக்கப்புறம் நான் எதையும் மறைக்கலை. அவரிடம் இங்கே நடந்த எல்லாத்தையும் சொல்லிட்டேன். அந்தப் பொண்ணுக்கு வாரிசு யோகம் இருக்கே, யார் அதை மலடின்னு சொன்னது என்று கண்டிச்சார். இப்போ தீக்குளிச்சு சாகக் கிடக்கிறாளேன்னு சொல்லி ஆவியா வந்து வந்து மிரட்டறதையும் சொன்னேன். அவருக்கு ஒண்ணுமே புரியலை. ஆஸ்பத்திரியில் சிந்து உயிரோட தான் இருக்காள்ங்கறதுக்கு அத்தாட்சி இருக்கான்னு கேட்டார். அவளுடைய அப்பாவும் என் பையனும் அவ கூடவேதான் இருக்காங்க. தினமும் சிகிச்சை நடந்திட்டுத்தான் இருக்கு. டாக்டர்கள் நர்ஸ்ங்கன்னு அத்தனை பேருக்குத் தெரியாதா அவள் உயிரோட இருக்காளா அல்லது செத்துப் போயிட்டாளான்னு என்று சொன்னேன். அவர் கொஞ்ச நேரம் யோசிச்சிட்டு இருந்துட்டு, என்னை ஒரு மாந்திரீகர் கிட்ட கூட்டிப் போனார்."

"மாந்திரீகரா? என்னப்பா, ஏன் விஷயத்தை இப்படிக் குழப்பிட்டிருக்கீங்க?" என்று குறுக்கே பாய்ந்தான் ரகு.

"நீ சும்மா இருடா. இந்த வீட்டில் நம்ம கண்ணுக்குத் தெரியலையே ஒழிய, ஏதோ ஒரு ஆவி சிந்து பேரைச் சொல்லிட்டு நடமாடிட்டிருக்கு."

"ஏதோ ஒரு ஆவி இல்லை. அது சிந்துவோடது தான். அவளை நான் நல்லாப் பார்த்தேன். அவள் குரல் எனக்குத் தெரியாதா?"

"அந்த மாந்திரீகர் என்ன சொல்றாருன்னா, இறந்து போய் சடங்குகள் செய்து சாந்தி கழிக்கப்பட்ட ஆவிகளைவிட, செத்தும் சாகாலுமாக இருக்கும் ஆவிகள் ரொம்பக் கொடூரமானவையாம். சிந்துவைப் பொறுத்த வரைக்கும் அவளுடைய ஆயுசு இன்னும் இருக்கு. ஆனா, ஆவி தங்கறதுக்கு உடம்பு இருந்தும் இல்லாமலுமாப் போச்சு. என்னதான் சிகிச்சைல இருந்தாலும் நடுநடுவ நினைவிழந்து கோமா நிலைக்குப் போறதுங்கறது என்ன? தற்காலிகமா செத்துப் போறதுதான். அப்புறமும் உடம்பை விட்டுவிட மனசில்லாமல் திரும்ப வந்து ஒட்டிக்கும்போதுதான் நினைவு வருது. அதனால உங்க வீட்டுக்கு நடுநடுவ வந்து போய் உங்க மனைவியை மிரட்டறது தீக்குளிச்ச அந்தப் பொண்ணோட ஆவிதான். அதில் சந்தேகமே இல்லை என்றார்."

"பார்த்தீங்களா, நான் சொன்னது சரிதான்னு இப்போவாவது ஒத்துக்கறீங்களா?"

"அதுக்கு இப்போ நாம் என்ன செய்யணுமாம்?"

"அவர் சொன்னவைகள் எல்லாம் நடைமுறை சாத்தியங்களான விஷயங்கள் இல்லை."

"என்னதான் சொன்னார்ன்னு சொல்லுங்களேன்"

"குறைந்த பட்சம் நீ ஒருமுறை அவளை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்க்கறது நல்லதுன்னு சொன்னார். தன்னை இந்த நிலையில் பார்க்கறதுக்குக்கூட வராமல் அலட்சியப்படுத்தறங்கற கோபம் அவளை ஆவேசம் கொள்ள வைக்கலாம்னு சொல்றார். நீ அவளைப் பார்த்து கொஞ்ச நேரம் அங்கேயே இருந்து அவள் அப்பாவுக்கு ஆறுதல் சொல்லிட்டு வந்தியானா அவள் கொஞ்சம் சாந்தமடைய வாய்ப்பு இருக்குன்னு சொன்னார். அதோட அவளுக்கு நினைவு திரும்பற சமயமா பார்த்து அவளிடம் மன்னிப்பும் கேட்டா, இன்னும் நல்லது. அவள் செத்தாலும் ஆத்ம சாந்தியோட மேலோகம் போயிடுவா. இல்லைன்னா அந்த ஏக்கத்துல அலைஞ்சிட்டே இருப்பாள்னும் சொன்னார்."

எல்லோரும் ராஜேஸ்வரியின் முகத்தையே பார்த்தபடி இருக்க, அவள் தீவிர சிந்தனையில் இருந்தது தெரிந்தது.

"வேறென்ன சொன்னார்?" என்று கேட்டாள் மெதுவாக.

"அது ரொம்ப பயங்கரமானது. நம்மால் நினைச்சுக்கூடப் பார்க்க முடியாதது"

"என்னதான் சொன்னார்ன்னு சொல்லுங்களேன்"

"அவள் ஒரேயடியாக இறந்து போவதுதான் இந்தக் குடும்ப சாந்திக்கு நல்லது. அவளுடைய உடம்பை எரிச்சு அந்த ஆவிக்கு தங்க இடமில்லாமல் செஞ்சாத்தான் ஏதாவது பூஜையோ மாந்திரீகமோ செஞ்சு அந்த ஆவியை அடைத்து வைக்க முடியும்னும் சொன்னார்."

பயங்கரமான அமைதி நிலவியது - அங்கே சில நிமிடங்களுக்கு.

"அப்பா! நீங்க சொல்றதுக்கு என்ன அர்த்தம்?" என்று மெல்லக் கேட்டான் ரகு.

"நீ என்ன நினைக்கிறியோ அதுதான்" என்றார் சம்பத் இறுதிப் போன குரலில்.

"அப்பா! எனக்கு என்ன தோணுதுன்னா... அந்த மாந்திரீகர் சொல்ற மாதிரி நடத்திட்டா என்ன?"

"என்னடா சொல்ற?"

"ஆமாப்பா! அம்மா அடிக்கடி சொல்ற மாதிரி அண்ணி இனிமேல் பிழைத்து வர்றதுக்கான சாத்தியங்கள் ரொம்பக் கம்மிதான். அன்னிக்கு நான் அவங்களைப் பார்த்தப்போ இரக்கத்தை மீறி பயம்தான் வந்தது. டாக்டரே

சொன்னாரா இல்லையா, எண்பது சதவீத தீக்காயங்களுக்கு அப்புறமும் இன்னும் அவங்க சாகாமல் இருக்கறது ஏதோ ஒரு வைராக்கியத்துல தான்னு. இப்படி உயிரை இழுத்துப் பிடிச்சு வச்சு அவங்க ஒருவேளை பிழைச்சு வர்றாங்கன்னே வச்சுப்போம். அவங்களால தன்னம்பிக்கையோட நடமாட முடியுமா? அந்தக் கோர உருவத்தோட அண்ணன்தான் குடும்பம் நடத்த முடியுமா? அதனால..."

"அதனால..."

"டாக்டர்ட்ட பக்குவமா சொல்லி, அண்ணியை..." ரகுவின் குரல் தாழ்ந்தது. "இது ஒண்ணும் தப்பில்லைப்பா. இப்போல்லாம் வெளிநாடுகள்ல இது சர்வ சாதாரணம். கருணைக் கொலை மாதிரிதான். அதுதான் அவங்களுக்கும் நல்லது. நமக்கும் நல்லது. அவங்க ஆவி ஒரேயடியா விடுபட்டதுக்கு அப்புறமும் சாந்தி அடையலைன்னா மாந்திரீகர் மூலமா அடக்கிக்கலாம்."

சம்பத் பதில் சொல்ல முடியாமல் வாயில் விரல் வைத்தார்.

"டேய்!" என்றாள் ராஜேஸ்வரி.

"அம்மா!"

'என்னடா சொல்ல வர்றீங்க? அங்கே ஆஸ்பத்திரில சிகிச்சைல இருக்கறவ இனிமேல் பிழைச்சு வர்றதுக்கான சாத்தியம் கொஞ்சம்கூட இல்லைங்கறதால, அவளைக் கொன்னு போடலாம்னுதானே?"

சம்பத்தும் ரகுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"வேண்டாம். இதுவரைக்கும் எது நடந்ததோ, அது எல்லாமே தானாகவே நடந்தது. இப்போ அவள் பிழைக்கறதும் சாகறதும்கூட தானாகவே நடக்கட்டும்" என்றாள் ராஜேஸ்வரி.

"ராஜி!"

"ஆஸ்பத்திரிக்கு வேணும்னா நான் வர்றேன். அவளைப் பார்க்கலாம்."

அவள் இந்த அளவுக்கு இறங்கி வந்ததே சம்பத்துக்கு திருப்தியாக, "நாளையே போகலாம்" என்றார்.

## 16

மதுரைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள் ராஜேஸ்வரி. வீட்டினை ஒழுங்குபடுத்தி, எல்லோருடைய துணிகளையும் இரண்டு பெரிய பெட்டிகளில் எடுத்து வைத்து, வேறு என்னென்ன கொண்டு போக வேண்டும் என்று பட்டியலிட்டுக் கொண்டிருந்தாள்.

அழைப்பு மணியின் ஓசை கேட்டது. வாசலுக்கு வந்தாள்.

வாசலில் ஒரு கடிதக் கவர் கிடந்தது. ஆள் யாரும் இல்லை.

'இது என்ன புதுக் கரடி. எனக்கு யார் இந்த மாதிரிக் கடிதம் அனுப்பி இருப்பது? ஹும்! என்னவெல்லாமோ நடக்க ஆரம்பித்து விட்டது இந்த வீட்டில்' என்று எண்ணியபடியே, கடிதக் கவரைப் புரட்டி அனுப்புநர் முகவரியைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

குப்பென்று வியர்க்காத குறை.

அவசரமாக உள்ளே வந்து கதவைத் தாழிட்டுவிட்டு, கவரினைப் பிரித்தாள்.

அங்கே நின்றபடியே கடகடவென்று படித்தாள்.

மின்விசிறி முழு வேகத்தில் சுற்றிக் கொண்டிருந்தும்கூட, வியர்த்துக் கொட்டியது.

மீண்டும் மீண்டும் படித்தாள். நேராக பூஜை அறைக்குள் ஓடினாள். அப்படியே மண்டியிட்டு அழத் தொடங்கினாள்.

''என்னை மன்னித்துவிடு பகவானே! மன்னிப்பு கேட்பதற்குக்கூட அருகதையற்றவளாக இருக்கிறேனே'' என்று வாய்விட்டுக் கதறத் தொடங்கினாள்.

எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தாளோ தொண்டை வலித்தது.

குளியலறைக்குச் சென்று குளிர்ந்த நீரில் நனைய நனையக் குளித்தாள்.

உடம்பின் சூடு கொஞ்சம் கொஞ்சமாக இறங்கியது. வெளியே வந்தாள். நெற்றியில் குங்குமத்தைப் பெரிதாக இட்டுக் கொண்டாள். தொலைபேசியின் அருகே சென்று எண்களைச் சுழற்றத் தொடங்கினாள்.

அலுவலகத்தில் வேலை மும்முரத்தில் இருந்த சம்பத், தொலைபேசி அடிக்க, எடுத்தார்.

அவர் அந்தக் கணத்தில் சற்றும் எதிர்பாராத செய்தி ஒன்றைச் சொல்லி, அவரை ஸ்தம்பிக்க வைத்தான் பூமிநாதன்.

"கடவுளே! எப்போ?" என்றார் ஆடிப் போனவராக.

அவன் கூறிய பதிலைக் கேட்கக்கூட அவருடைய காதுகளுக்கு மூளை கட்டளை இடவில்லை.

இடிந்து போய் உட்கார்ந்திருந்தவரை உலுக்கியது அடுத்த தொலைபேசி அழைப்பு.

"ராஜியா? என்னம்மா திடீர்னு? நல்லாத்தானே இருக்கற?" என்று கேட்டார் லேசான பதற்றத்துடன். கடந்த சில மாதங்களாகவே வீடு வீடாக இல்லாமல் போனதில் அவருக்குள்ளும் மனதுக்குள் சிறிய சலிப்பு இருந்தது.

"என்னங்க, நான் செஞ்ச தவறுகளை எல்லாம் உணர்ந்துட்டேங்க. ஆனா, அதுக்கு தண்டனை வேணாமா? நீங்க எல்லாரும் என் மேல் வைத்துள்ள அன்பாலயும், பாசத்தாலயும் என்னை மன்னிச்சிருக்கீங்கன்னு தெரியுது. ஆனா,

நான் அதுக்கெல்லாம் அருகதை இல்லாதவ."

ராஜேஸ்வரியின் பேச்சு இதுவரை எப்போதும் இல்லாத விதமாக இருப்பதைக் கேட்க சம்பத்துக்குள் பரபரப்பு.

''சரி, விடும்மா. இப்போ எதுக்குக் கண்டதையும் நினைச்சுக் குழம்பிட்டிருக்க?''

"இல்லீங்க. இதுநாள் வரைக்கும் குழம்பி இருந்தேன். இப்போதான் தெளிஞ்சிருக்கேன்."

அவள் குரலில் தெரிந்த அமானுஷ்ய உறுதி சம்பத்தைப் பயப்படுத்தியது.

"நான் என் மருமகள் சிந்து இருக்கும் இடத்துக்கே போகிறேன். என்ன அவள் நெருப்பின் துணை தேடினாள். நான் ஒரு கயிற்றின் உதவியில் தொங்கப் போகிறேன். இதுநாள் வரையில் அவளிடம் கேட்காத மன்னிப்பை அவளிடம் போயே நான் கேட்டுக் கொள்கிறேன். என்னை நீங்க மன்னிச்சிடுங்க."

அவள் பேசப் பேச 'முட்டாள் முட்டாள்' என்று கத்த வேண்டும் என்று சம்பத்தின் நாக்கு துடித்துக் கொண்டிருக்கும்போதே, தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

ஆடிப் போனார் சம்பத். படபடவென்று அந்தக் கருவியின் பட்டன்களை அடித்துப் பார்த்தார். அவசரமாக வீட்டுக்கான எண்களை அழுத்தினார்.

அழைப்பொலி சென்று கொண்டே இருந்தது.

புரிந்துவிட்டது. ராஜேஸ்வரி ஏதோ தீவிர முடிவுக்குச் சென்றுவிட்டாள். அவளைத் தடுத்தாக வேண்டும்!

பயத்துடன் ரகுவைத் தொடர்பு கொண்டார். தான் உடனடியாக வீட்டுக்கு ஓடுவதாகச் சொல்லிவிட்டு அவசரமாகக் கிளம்பினார்.

கிட்டத்தட்ட நண்பகல் பொழுது என்பதால், ஆளரவம் குறைந்திருந்த சாலைகளின் வழியே, ஆட்டோ எவ்வளவோ வேகமாகச் சென்ற போதும், அவருடைய மனவேகத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

கண்களில் நீர் கோர்த்துத் தாரையாக வழிய முயல்வதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ராஜி! உன்னை யார் என்ன மாதிரிச் சொன்னாலும், நானும் கொள்கை அளவில் அவற்றை ஒப்புக் கொண்டாலும், என் மனைவி நீ என்கிற ஸ்தானத்தில் உன்னை எவ்வளவு உயரத்தில் வைத்திருந்தேன். இப்படி ஒரு முடிவு எடுக்குமுன் என்னைப் பற்றியாவது ஒருகணம் சிந்தித்திருக்கக் கூடாதா?

அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார். வீடு வந்து சேர்ந்து ஆட்டோக்காரனிடம் சில்லறைகூட வாங்காமல் உள்ளே பாய்ந்தார்.

வெளிக்கதவு வெறுமனேதான் சார்த்தியிருந்தது.

"ராஜீ! ராஜீ!" என்று அலறியபடியே தங்கள் இருவரின் இத்தனை வருட தாம்பத்ய வாழ்க்கைக்கான சாட்சியாகிய படுக்கை அறையை நோக்கி விரைந்தார்.

ஜன்னல் கதவுகள் சார்த்தப்பட்டிருந்தன. கதவும் உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்தது.

"ராஜீ! ராஜீ!" என்று கத்தியபடியே கதவை ஓங்கி ஓங்கித் தட்டினார்.

அடுத்த சில நிமிடங்களில் ஓடி வந்தான் ரகு.

அவர் கதவுடன் போராடிக் கொண்டிருந்ததைக் கண்டு, தானும் சேர்ந்து மோத ஆரம்பித்தான்.

"ராஜீ! அம்மா!" என்ற அழுகையுடன் மோதி மோதிக் கதவையே உடைத்துக் கொண்டு உட்புறம் பாய்ந்தனர் இருவரும்.

அங்கே கட்டிலின் அருகில் இருந்த ரெட்டை சோஃபாவில் இவர்கள் இருவரையும் பார்த்துக் குறும்பாய்ச் சிரித்தபடி கைகோர்த்து நெருக்கமாக உட்கார்ந்திருந்தனர் ராஜேஸ்வரியும், சிந்துவும்.

## 17

"அன்புள்ள அத்தைக்கு,

தங்களின் மருமகள் சிந்து எழுதுவது.

நான் உயிருடன்தான் இருக்கிறேன்.

நான் அப்பா வீட்டுக்குச் சென்றபோது, செத்துப் போகும் முடிவோடு தான் இருந்தேன். ஏனென்றால், நீங்கள் மனம் மாறி, சமாதானமாகி என்னைத் திரும்ப அழைத்துக் கொள்வீர்கள் என்கிற நம்பிக்கை எனக்குச் சிறிதும் இல்லாமல் போய்விட்டது. அதோடு என் அப்பாவுக்கு என் திருமண வாழ்க்கை இப்படிப் பாதியில் முடிவது தெரிந்தால், அவரால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாது. அவருக்கு ஏதாவது ஒன்று ஆகி, அதை நான் பார்க்கும் தைரியம் எனக்குக் கிடையாது. அதனால், நானே முந்திக் கொண்டு இறந்து போக முடிவு செய்தேன்.

நான் என் மீது மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீப்பொருத்திக் கொள்ளும் நேரம் பார்த்து, உங்கள் பெரிய மகனால் தடுக்கப்பட்டேன். அவர்தான், பிறகு செய்தி கொடுத்து தன் தம்பிகளை வரவழைத்து அந்த நிகழ்ச்சி குறித்து விவாதித்தார். அவர்கள் எல்லோரும் சேர்ந்து போட்ட கூட்டுத் திட்டம்தான் நான் தீக்குளித்து சாக இருப்பதாக உங்களுக்குத் தெரிவித்து, பிறகு ஆவியாக வந்து பயமுறுத்துவது என்பது. நான் செத்து விட்டேனா உயிருடன்தான் இருக்கிறேனா என்பது குறித்த சந்தேகத்திலேயே உங்களை வைத்திருந்தால்தான் இந்த விவகாரத்தில் போலீஸின் தலையீடு ஏன் இல்லை என்பது போன்ற திசைகளில் உங்கள் சிந்தனை ஓடாமல் பயத்தால் மட்டுமே தாக்குண்டு இருப்பீர்கள் என்று முடிவு செய்து செயல்படுத்தத்

தொடங்கினார்கள்.

நான் இதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டேன் என்று எவ்வளவோ மறுத்துப் பார்த்தேன். மாமா உள்பட அனைவரும் தங்களுடைய குணத்தில் மாறுதல் ஏற்படுத்தி, உறவினர்கள் மத்தியில் தங்களுக்கு மதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்தித் தர இருக்கிற நல்ல விஷயத்துக்காக இப்படிச் செய்துதான் தீர வேண்டும் என்றும், இந்த சந்தர்ப்பத்தை விட்டால், வேறு சந்தர்ப்பம் இப்படி அமைந்து வராது என்றும் இன்னும் இந்த வீட்டில் மூன்று மருமகள்கள் வர வேண்டியுள்ளது என்றும், அவர்களால் நிச்சயம் அப்போதைய போக்கில் இருந்த உங்களால் ஒத்துப் போக முடியாது என்றும், அது குடும்ப ஒற்றுமையைத்தான் பாதிக்கும் என்றும் பலவாறு சொல்லி, என்னைச் சம்மதிக்க வைத்துவிட்டார்கள்.

முதன்முறையாக ஆவியாக வந்தபோது, சவால் விட்டாகி விட்டது. உங்களுடைய நான்கு பிள்ளைகளையும் இல்லாமல் ஆக்குவதாக. ஆனால் போலீஸ், பத்திரிகை, உறவுக்காரர்கள் தலையீடு, பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலகத் தலையீடு என்றெல்லாம் இல்லாமல், ஒவ்வொரு பிள்ளையையும் காட்சியிலிருந்து விடுபட வைப்பது குறித்தெல்லாம் உங்கள் மகன்கள்தான் எத்தனை அழகாகத் திட்டம் போட்டார்கள் தெரியுமா? நீங்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்தான் அத்தை, இவ்வளவு அறிவும் சமயோசிதமும் சேர்ந்த பிள்ளைகளைப் பெறுவதற்கு. நீங்கள் ஒருவேளை மதுரைக்கு வந்து என்னைப் பார்ப்பதற்குக் கிளம்பி இருந்தால், நான்தான் என்று காட்டுவதற்காக உங்க இரண்டாவது மகனின் டாக்டர் நண்பர் மூலமாக ஒரு தீக்குளித்த பெண்ணின் சிகிச்சையைப் பார்க்கக்கூட ஏற்பாடு செய்திருந்தார்கள் உங்கள் கில்லாடி மகன்கள், நல்ல வேளையாக நீங்கள் அவர்களுக்கு அந்தச் சிரமத்தைக் கடைசி வரை அளிக்கவில்லை.

அவர்கள் எல்லோர் நோக்கமும் தாங்கள் மனம் மாறி எல்லோருக்கும் இனியவராக ஆகவேண்டும் என்பது மட்டுமே என்பதை நான் உங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்கிறேன் அத்தை. குடும்பம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எல்லோருடைய மனதிலும் நீங்கள் மரியாதைக்குரிய ராணியாக அரசோச்ச வேண்டும் என்பது மட்டும்தான் எல்லோருடைய ஆசையும்.

நான் செத்துப் போக வேண்டும் என்று திரும்பத் திரும்ப நீங்கள் சொல்லிக் கொண்டிருந்த வரையில், மாறுதலே உங்களுக்குள் வரவில்லை என்கிற ஏக்கமும், ஆதங்கமும் எங்களுக்குள் வளர்ந்தபடியே இருந்தது. ஆனால், யாருக்கும் சந்தேகம் வர இயலாதபடி என்னைக் கருணைக் கொலை செய்து விடலாம் என்கிற திட்டம் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டபோது, நீங்கள் எப்போது மறுத்தீர்களோ, அந்த இடத்திலேயே நீங்கள் இளகி வந்துவிட்டீர்கள் என்று நான் புரிந்து கொண்டு இந்த நாடகத்தை முடித்துவிடலாம் என்று மன்றாடிப் பார்த்தேன்.

உங்கள் பிள்ளைகள் ஒப்புக் கொள்ளவில்லை. இப்போது தான் அம்மாவிடம் மாறுதல் தெரிகிறது. இந்தச் சூட்டோடு இன்னும் நன்றாகப் பக்குவப்படுத்திவிட்டு பிறகு வெளிப்படலாம் என்று யோசனை தெரிவித்ததுடன், அடுத்தபடியாக ரகு செத்துப் போவது போன்ற நாடகத்துக்கு ஏற்பாடுகளை யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். நான் ஒத்துழைக்க மறுத்தால்கூட, என்னை விலக்கிவிட்டு வேறு மாதிரியாகத் திட்டம் போடத் தொடங்கி இருக்கிறார்கள்.

நான் ஒவ்வொரு முறை ஆவியாக வரும்போதும், உங்களை அப்சர்வ் செய்தபடிதான் இருந்தேன். நீங்கள் மனதளவில் எவ்வளவு இடிந்துபோய் வருந்தீர்கள் என்பதை நான் உணராமல் இல்லை. ஏற்கெனவே இரண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்த நீங்கள், மூன்றாவது இழப்பைத் தாங்குவீர்களா என்பது குறித்த என்னுடைய பயமே, இந்தக் கடிதத்தை எழுத வைத்துள்ளது. எனவே, இந்த விஷயமாக இனிமேல் நடைபெறப் போகும் பயமுறுத்தல் காட்சிகளுக்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து உங்கள் ஆரோக் கியத்தைக் கொடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்வதற்காகத்தான் எழுதுகிறேன்.

என்னுடைய நன்மைக்காக தங்களையே துன்புறுத்தும் அளவுக்கான ஏற்பாடுகளைச் செய்த மாமா மற்றும் உங்கள் பிள்ளைகளுக்கு எதிராக நான் இவ்வாறு தங்களுக்குக் கடிதம் எழுதும் செயல் துரோகம்தான். ஆனாலும், நான் இதைச் செய்வதற்குக் காரணம் ஒரு பெண்ணாக நீங்கள் தனிமைப்படுத்தப் படுவதை என்னால் பொறுக்க முடியவில்லை என்பதுதான்.

இத்தனை நாட்களில் எனக்கும் ஓரளவு மனப் பக்குவமும், தைரியமும் வந்துள்ளது. என்னுடைய கணவருக்கு நான் தகுதி இல்லை என்று நீங்கள் நினைத்தால், என்னைத் தள்ளி வைத்துவிட்டு, அவருக்கு வேறு திருமணம் செய்து வைத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு விட்டேன். நான் இந்த நாடகத்தில் எனக்குத் தரப்பட்ட வேடத்தை முன்னிட்டு சில தருணங்களில் தங்களை அவமரியாதையாகப் பேச வேண்டியதாயிற்று. அதற்காக என்னை மன்னியுங்கள்.

நான் இப்போது இதே ஊரில்தான் இருக்கிறேன். அங்கே சொல்லிவிட்டு வரவில்லை. என்னைக் காணாமல் என் கணவரும் அப்பாவும் தவிக்க ஆரம்பித்திருப்பார்கள். தவிக்கட்டும், உங்களை எவ்வளவு தவிக்க விட்டார்கள்! காவேரி நகரில் என் தோழி இருக்கிறாள். அவள் வீட்டில் தான் இருக்கிறேன். மிகுந்த நம்பிக்கையோடு அவள் மூலம்தான் இந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பி உள்ளேன்.

தங்களின் முடிவு என்னவாக இருந்தாலும், 23927 என்ற எண்ணுக்குத் தொலைபேசியில் தெரிவியுங்கள். நான் அங்கே நம் வீட்டுக்கு நிரந்தரமாக வருவதா அல்லது என் மற்ற சாமான்களை எடுத்துக் கொண்டு நிரந்தரமாக வெளியேறுவதா என்பதைத் தங்களின் பதில் தீர்மானிக்கட்டும்.

மாலைமதி 03.03.2003

என்றும் தங்கள் அன்புடன்,

இன்றுவரையில் உங்கள் மீதான மரியாதை குறையாத் மருமகள்,

சிந்து."

கடிதத்தைப் படித்து முடித்தனர் எல்லோரும்.

ஹால் முழுக்க மனிதர்களாலும், அவர்களின் மகிழ்ச்சியாலும் நிறைந்திருந்தது.

"அண்ணி! ஆனாலும் நீங்க இப்படி கடைசி நிமிடத்தில் கட்சி மாறி இருக்கக் கூடாது" என்றான் பாலன் பொய்க் கோபத்தோடு.

"இல்லப்பா! நீ காணாமல் போனதில் இருந்து, உன் அம்மா எவ்வளவு இடிஞ்சு போய் இருந்தாங்கன்னு எனக்குத்தான் தெரியும்"

"அவனுக்கென்னம்மா தெரியும்? என்ன இருந்தாலும் ஆம்பளை ஆம்பளைதான்னு எல்லோருமே நிரூபிச்சிருக்காங்க. ஒரு பொம்பளை மனசு இன்னொரு பொம்பளைக்குத்தான் தெரியும்னு நீதான் என் சார்பில் யோசிச்சிருக்கற. உன்னை சரிவர அடையாளம் கண்டுக்காமல் இருந்த விஷயத்தில்தான் நான் குருடியாவே இருந்திட்டேன்."

"விடுங்க அத்தை. முடிஞ்சதெல்லாம் முடிஞ்சதாவே இருக்கட்டும்."

"அதெல்லாம் சரி! எங்களை எல்லாம் கலக்கின இந்த கடைசி நிமிட வேலை யாருடைய ஐடியா?"

ராஜேஸ்வரி சிரித்தாள்.

"இந்தப் பெண்ணுக்காக பூமிநாதன் எதையும் செய்யத் தயாராகிறான் என்றால், அது இயற்கை; அவன் இவளுடைய கணவன் என்பதற்காக என்று சமாதானம் செய்து கொள்ள முடிந்தது. ஆனால், அவனுடைய தம்பிகளான என் மற்ற மகன்கள், என் கணவர் என்று எல்லோரும் கட்சி கட்டிக் கொண்டு என்னை ஏமாற்றி நாடகமாடி அச்சுறுத்திப் பைத்தியக்காரியாக்கி வேடிக்கை பார்க்க முயன்றிருக்கிறார்கள் என்றால், அது என் ஆணவத்தையும் அகங்காரத்தையும் ஒடுக்கி, என்னைத் திருத்த வேண்டும் என்கிற ஒரே காரணம் தானே என்று சிந்தித்துப் பார்த்தேன். அந்தக் கணமே திருந்திவிட்டேன். நான் அளவுக்கு மீறி இம்சிக்கப்படுகிறேன் என்று உணர்ந்த மறுகணமே எனக்குக் கடிதம் எழுதி நடந்த எல்லாவற்றையும் விளக்கி நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் மட்டுமே என் முன் வருவதாகப் பணிந்து நின்ற சிந்து என் மருமகள் அல்ல. மகளினும் உயர்ந்தவள். அதனால்தான் அவள் குறிப்பிட்டிருந்த எண்ணுக்கு உடனடியாக தொடர்பு கொண்டு அவளை வரவழைத்துக் கொண்டேன். ஆனா, எல்லோருமாச் சேர்ந்து என்னை இவ்வளவு நாள் ஆவி, பூதம், பையன்கள் மறைவுன்னு எவ்வளவு பாடுபடுத்தினீங்க? அதுக்கு பதில் கொடுக்க வேண்டாம்? எப்படிக் கொடுத்தேன் பார்த்தீங்களா?"

“அம்மா! நாங்க இத்தனை பேர் சேர்ந்து வியூகம் வகுக்க வேண்டி இருந்தது உன் ஒருத்தியை ஏமாற்ற. நீ ஒருத்தி எவ்ளோ குறைஞ்ச நேரத்தில் எங்க அத்தனை பேரையும் பதற வச்சு ஒரு வழி பண்ணிட்ட? நீ பெரிய ஆளுதாம்மா” என்றான் இன்னும் பதற்றம் குறையாத பாலன்.

“சும்மாதானா? என் ராஜியா, கொக்கா?” என்று சிரித்தார் சம்பத்.

எல்லோரும் மனதாரச் சிரித்த கணத்தில் அடிவயிற்றிலிருந்து எழுந்த ஓங்கரிப்புடன் குமட்டலை அடக்க முடியாமல் கையலம்பும் இடம் நோக்கி வாந்தி எடுக்க ஓடினாள் சிந்து.

இந்த முறை அவள் பின்னேயே ஓடினார்கள் அனைவரும்.




அட்டையில்:
‘இயற்கை’ குட்டிராதிகா

“எனக்குள் எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இது பித்த வாந்தியாக இருந்தாலும் சரி, மத்த வாந்தியாக இருந்தாலும் சரி, என் மருமகளை ஓய்வெடுக்க விடுங்கள்” என்று கட்டளையிட்ட ராஜேஸ்வரியின் குரலில் நிஜமான கண்ணியமான கம்பீரம் இருந்தது.

மனம் ஒப்பி எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கும் வீட்டில் திருமகள் எல்லா ஐஸ்வர்யங்களையும் அள்ளிக் கொட்டுகிறாள்.

இந்த வீடு இந்தக் கணத்தில் அந்தத் தகுதியைப் பெற்றுவிட்டது.

குழந்தைப்பேறுகூட ஒருவகை ஐஸ்வர்யம்தானே?

■■■

அச்சிட்டவர் : பி. வரதராசன். பதிப்பாளர் : பி.வி. பார்த்தசாரதி. குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: பி.வி. பார்த்தசாரதி.

கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.